2025 தூரநோக்கு


# V2025 வளமான நாடு

V2025 வளமான நாடு



மாற்றமடையும்

# நவீன பொருளாதாரம்



2015ம் ஆண்டு ஜனவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இலங்கைப் பிரஜைகள் வரலாற்றுத் திருப்புமுனை ஒன்றுக்கான பின்புலத்தை ஏற்படுத்தும் நோக்கில் இரண்டு தடவைகள் தமது வாக்குப்பலத்தை பயன்படுத்தினர்.

இனங்கள் மற்றும் மதரீதியிலான பிளவுகளை ஊக்குவிக்கும் மற்றும் அனைத்து வகையான அடிப்படைவாதங்களுக்கும் எதிராக வலுவான ஜனநாயகம், நீதிநிலைநாட்டப்படல், நல்லாட்சி, நல்லிணக்கம், நிலைபேறான சமாதானம், சமவுரிமை, அனைத்து மக்களினதும் மனித உரிமைகள் மற்றும் நாட்டின் பல்லினப் பரம்பலை அங்கீகரித்தல், அதனை ஊக்குவித்துப் பாதுகாப்பதற்காகவும், இலங்கை அரசியல் கலாசாரத்தில் புதியதொரு மாற்றத்துடன் அனைத்து மக்களுக்கும் பயன்தரு சமநிலை அபிவிருத்தியொன்றுக்காக வடக்கு, தெற்கு, கிழக்கு, மத்திய மற்றும் மேல் மாகாண மக்கள் வாக்குப் பலத்தைப் பயன்படுத்தினர்.

அவை வலுவான ஜனநாயகம், ஜனநாயக அமைப்புகள், நல்லிணக்கம், நிலைபேறான சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் உறுதிப் பிரமாணம் எடுத்த மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக வாக்களித்தி பொதுமக்களின் எதிர்பார்ப்புகள் என்பதுடன், மக்கள் பிரதிநிதிகள் அவற்றை நிறைவேற்றும் பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

நாம் அவற்றில் பெரும்பாலான பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளோம்.

சர்வதேச ரீதியாக இலங்கையின் நற்பெயரை மீண்டும் கட்டியெழுப்புதல், அரசியலமைப்பின் 19வது திருத்தச் சட்டம், சுயாதீன ஆணைக்குழுக்களின் உருவாக்கம், தகவல் அறியும் சட்டம், கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல், உத்தேச நல்லிணக்க கட்டமைப்புக்காக பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல், அரசியலமைப்புச் சபையொன்றை நிறுவுதல், நாட்டு மக்களை ஊழல்களிலிருந்து விடுவிப்பதற்கான செயற்திட்டங்கள் மற்றும் நல்லாட்சியை அடிப்படையாகக் கொண்ட நுழைவுப் பாதை வழியாக நாட்டை முன்னகர்த்திச் செல்லல் என்பன அவற்றில் பிரதானமான விடயங்களாகும்.

ஏனைய விடயங்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்து கொள்ள முடியாது போயிருந்தாலும், அவற்றையும் ஊக்கத்துடன் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

பொதுமக்களின் கடன் சுமையினை குறைப்பதற்காக அவர்கள் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்காக வேண்டி முக்கிய நடவடிக்கைகள் பலவற்றை நாம் எடுத்துள்ளோம். வரலாற்றில் ஒருபோதும் நடந்திராததைப் போன்று அரச மற்றும் தனியார் துறையினரின் வேதனங்களை உயர்த்துதல், ஓய்வூதியக் கொடுப்பனவினை அதிகரித்தல், சமுர்த்தி கொடுப்பனவினை அதிகரித்தல், பெற்றோலியம், எரிவாயு உட்பட அத்தியவசியமான ஔடதங்களின் விலைகளை குறைத்தல், இதுவரை 430,000 க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவை மேற்கூறப்பட்ட நோக்கத்தை அடைந்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள சில நடவடிக்கைகளாகும்.

ஏனைய ஜனநாயக நாடுகள் போன்று மேற்குறித்த விடயங்களில் விரைவான முன்னேற்றமொன்றை பெற்றுக்கொள்வதற்கான வழி இலங்கையைப் பொறுத்தமட்டில் நேரடிவழிமுறை கொண்டதோ அல்லது இலகுவானதோ அல்ல. ஏனெனில் இலங்கையும் ஏனைய நாடுகள் போன்று சர்வதேச ஒழுங்கிற்கும், இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்கவும் நேர்ந்துள்ளதன் காரணமாக சிற்சிறு பின்னடைவுகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வளர்ச்சி கண்ட பாதுகாப்பு மூலோபாயங்களுடன் நவீன பாதுகாப்பு திட்டத்தின் ஊடாக இலங்கையை வலுவான நாடாக கட்டியெழுப்புவதில் நாம் கவனம் செலுத்துவோம்.

எனினும் நாட்டின் 70வது சுதந்திர தினத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நம்மிடமிருந்து பல்லாண்டுகளாக பறிபோயிருக்கும் கனவுகளான நிலையான, அமைதியான, நல்லிணக்க, சுபீட்சமான இலங்கைச் சமூகமொன்றை உருவாக்குவதற்கான நமது எதிர்பார்ப்புகளை நனவாக்கிக் கொள்வதற்காக நாம் தொடர்ந்தும் தளராத உறுதியுடன் செயற்படுவோம்.

# உள்ளடக்கம்

01

பக்கம் 11

அரசாங்கத்தின் பொருளாதார இலக்கு

02

பக்கம் 12

அபிவிருத்திப் பயணத்தின் குறுக்கீடுகள்

03

பக்கம் 13

எதிர்வரும் மூன்றாண்டுகளுக்கான பொருளதார இலக்குகள்

04

பக்கம் 16

வளர்ச்சிக்கான புதிய வழிமுறை

05

பக்கம் 17

பேரண்டப் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்

09

பக்கம் 36

தொழிநுட்பவியலும் டிஜிட்டல்மயமாக்கமும்

10

பக்கம் 39

சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னல்கள்

11

பக்கம் 41

விவசாய மற்றும் நிலைபேறான அபிவிருத்தி

06

பக்கம் 20

வளர்ச்சியை வலுப்படுத்தல்

07

பக்கம் 25

காணி, தொழிலாளர்கள் மற்றும் முதலீடு

08

பக்கம் 29

சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள்

12

பக்கம் 48

நிர்வாகமும் பொறுப்பும்

13

பக்கம் 50

ஒருங்கிணைப்பினை பலப்படுத்துதல் மற்றும் செயற்படுவதை பரிசீலித்தல்

14

பக்கம் 51

முடிவுரை



# 01. அரசாங்கத்தின் பொருளாதார இலக்கு

2025ம் ஆண்டளவில் இலங்கையை சுபீட்சம் மிக்கதொரு நாடாக கட்டியெழுப்புவது எங்கள் நோக்காகும். நம்நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் உயர்ந்த வருமானத்தையும் சிறந்ததொரு வாழ்க்கை முறைக்குமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்போம். இதனை அடைவதற்கான தகுந்த கட்டமைப்பு மாற்றம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மக்களின் வருமானத்தை அதிகரித்தல், தொழில்வாய்ப்புகளை வழங்குவதை உறுதிப்படுத்தல், அனைவருக்கும் வீடு, மற்றும் உயர்ந்த வாழ்கைத் தரம் போன்ற விடயங்களுக்கு இதன்போது முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்துமா சமுத்திர பிராந்தியத்தின் ஏற்றுமதிப் பொருளாதாரக் கேந்திர நிலையமாக இலங்கை மாற்றப்படும். இலங்கையின் உள்நாட்டு நுகர்வோர் சந்தையானது இருபது மில்லியன் வாடிக்கையாளர்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதை நாம் அறிவோம். யதார்த்தமும் அதுதான். அதன் காரணமாக உயர்மட்டத்திலானதும், நிலைபேறான, நீண்டகால அபிவிருத்தியொன்றுக்காக வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களில் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. உபாய ரீதியாக இலங்கையை இந்து மாசமுத்திரத்தின் கேந்திர நிலையமாக நாம் மாற்றியமைப்போம். அதன் மூலம் உலக உற்பத்தி வலயமைப்பு வாய்ப்பினுள் உள்நுழைவதற்கான வாய்ப்புகளை நாம் உள்நாட்டு வர்த்தகர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்போம். இதன்மூலம் இலங்கையரின் வாழ்க்கையை சுபீட்சமாக்கும் பொருட்டு உள்நாட்டுப் பொருளாதாரத்தை பலமிக்கதாகவும், துரிதமான முன்னேற்றத்தைக்கொண்டதாகவும் மாற்றியமைப்போம்.

## போட்டித்தன்மையை ஊக்குவித்து, வெளிப்படைத்தன்மையுடன் அனைத்து இலங்கையர்களுக்கும் செழிப்புடனான சமவாய்ப்பை ஏற்படுத்தி ஊழலை முறியடிப்போம்


# 02. அபிவிருத்திப் பயணத்தின் குறுக்கீடுகள்

**உற்பத்தி, செயற்திறன் மற்றும் நமது பொருளாதாரத்தை உலகளாவிய ரீதியில் போட்டி போடும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு தேவையான மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும்.** பொருளாதார பிரச்சினைகளை நாம் எதிர்கொண்டுள்ளோம். அரசாங்கத்தின் நிதி நிர்வாகம், சந்தையின் நிறுவனரீதியான நெருக்கடிகள், பலவீனமான சொத்துரிமைகள், போதுமான உட்கட்டமைப்புகளின்மை, ஏற்றத்தாழ்வுமிக்க நிதிவளம், நிறுவனங்களின் பலவீனங்கள் மற்றும் பொருட்களின் விலைகளில் மாற்றங்கள் என்பன நாம் எதிர்கொண்டுள்ள சிக்கல்களாகும்.

- **பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க கட்டமைப்புக் குறைபாடுகள்.** பெருமளவில் பெறப்பட்ட வர்த்தக கடன்களை அடிப்படையாகக் கொண்ட அரசின் உட்டகட்டமைப்பு செலவினங்களினால் ஏற்படும் செயற்பாடுகளினால் வளர்ச்சி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் நிதிவளம் மற்றும் அந்நிய முதலீடுகளில் தளம்பல் என்பன நாம் எதிர்கொள்ளும் சிக்கல்களாகும். இவற்றுக்கு மத்தியில் முதலீட்டாளர்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. நேரடி அந்நிய முதலீடுகள் மற்றும் உள்நாட்டு தனியார் முதலீடுகளில் வீழ்ச்சியொன்று ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான உள்நாட்டு மற்றும் அந்நிய முதலீடுகள் அனைத்தும் ஆதன மற்றும் அது சார்ந்த வர்த்தக முயற்சிகள், சந்தையில் போட்டித்தன்மை குறைந்து இறக்குமதிகளிலும் முதலீடுசெய்யப்படுகின்றது.
- **ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் தளம்பல்.** கேள்வி-நிரம்பல் ஊடாக நிர்ணயிக்கப்படாத பணப்பிமாற்ற வீதம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் எதிர்மறையான விளைவிற்கான காரணியாகும். ஏற்றுமதி தொடர்பிலான நம்பிக்கையீனம், பாதிப்புகள் என்பன ஏற்றுமதித் துறையின் பின்னடைவுக்குக் காரணமாகும். இலங்கையின் ஏற்றுமதியானது ஒருசில ஏற்றுமதி உற்பத்திகளில் மட்டுமே இன்னும் தங்கியுள்ளது. அதற்காக வர்த்தக கடன்கள் மீது பாரிய நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளின் நேரடி முதலீடுகள் பெரும்பாலும் வீடமைப்புத் தொகுதிகள் மற்றும் காணிகள், வெளிநாடுகளுக்கான பயிற்சியற்ற தொழிலாளர்கள் அனுப்பும் அந்நிய செலாவணி போன்ற துறைகளை நோக்கியதாகவே உள்ளன.
- **பொது அரசாங்க நிதி வளங்களின் தாக்கங்கள்.** வீழ்ச்சியடைந்து வரும் அரச வருமானம், அதிகரித்துவரும் பொதுபடுகடன் முக்கியமாக சலுகைகள் அற்ற வெளிநாட்டு கடன்களுடன் இணைந்து தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அரசாங்கத்தின் கடன் தொகை அதிகரிப்பு காரணமாக அபிவிருத்தியில் தடைகள் ஏற்படுகின்றது. நம்பிக்கையீனம், அதிகரித்த வரி விதிப்பு, சமூக மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கான வளங்களை வேறு துறைகளில் பயன்படுத்தல், அதிகரித்த அரச கடன்கள், தனியார் மற்றும் அந்நிய முதலீடுகள் கட்டமைப்பு ரீதியாக மேற்கொள்ளப்படாமை போன்றவை அதிர்வுகளை ஏற்படுத்துகின்றது.
- **ஒழுங்குபடுத்துதலினால் வளர்ச்சி பாதிக்கப்படல்.** இவ்வாறான தடைகள் அந்நிய மற்றும் உள்நாட்டு தனியார் முதலீடுகளுக்குத் தடையாக உள்ளன. இதில் வர்த்தக ரீதியான உற்பத்திகளை மேற்கொள்வதற்கான இடப்பிரச்சினை முக்கியமானதாகும். அதே போன்று ஒன்றிணைந்த சர்வதேச அபிவிருத்தியொன்றுக்கான பயிற்சி பெற்ற தொழிலாளர் வளம் நம் நாட்டில் இல்லை. நடைமுறைக்கேற்ப புதுப்பிக்கப்படாத, தொழிலாளர் சந்தையின் செயற்திறனற்ற தன்மை முக்கியமாக குறைந்தளவு பெண்களின் பங்களிப்பு என்பனவும் தடைகளாக உள்ளன. இறுக்கமான ஏற்றுமதி,இறக்குமதி வரிச் சட்டங்கள் தொலைத் தொடர்பு, போக்குவரத்து, எரிபொருள் விலைகள் அதிகரிப்பு அவற்றின் தரத்தில் குறைபாடு எரி சக்தி, போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புக்களின் வளப்பற்றாக்குறைகள் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சிகளுக்கான தடைகளாக காணப்படுகின்றன.

# 03. எதிர்வரும் மூன்றாண்டுகளுக்கான பொருளதார இலக்குகள்


2025 அபிவிருத்தி நோக்கிற்காக எதிர்வரும் மூன்றாண்டுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான குறைபாடுகளைக் களைவது அரசாங்கத்தின் நோக்காகும். எதிர்வரும் மூன்றாண்டுகளுக்குள் தனிநபர் வருமானத்தை 5,000 அமெரிக்க டொலர்கள்வரை உயர்த்துவது எமது இலக்காகும். பத்து லட்சம் தொழில்வாய்ப்புகள், ஆண்டொன்றுக்கு 05 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அந்நிய முதலீடுகளை அதிகரித்துக்கொள்வது, வருடமொன்றுக்கு 20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை ஏற்றுமதிகளை இரட்டிப்பாக அதிகரித்துக்கொள்வது போன்றவை அரசாங்கத்தின் ஏனைய இலக்குகளாகும். எம்மால் கடந்த 02 வருட காலப்பிரிவினுள் மாத்திரம் 430,000 தொழில்வாய்ப்புக்களை உருவாக்கி உள்ளோம். இவ்வாறான இடைப்பட்ட இலக்குகளின் ஊடாக 2025ம் ஆண்டளவில் நம் நாட்டை உயர் மத்திய தர வருமான பொருளாதார நாடாக வளர்ச்சிபெறச்செய்வது எமது நோக்கமாகும்.



அறிவை அடிப்படையாக
கொண்ட மிகவும்
போட்டிமிக்க சமூக சந்தைப்
பொருளாதாரத்துடன்

இலங்கை இந்துமா

# சமுத்திர பிராந்தியத்தின் கேந்திர நிலையமாக திகழும்



# 04. வளர்ச்சிக்கான புதிய வழிமுறை

போட்டிச் சூழலில் அறிவுசார் ஆற்றல்களை அதிகரித்துக் கொள்வதற்கான வழிகளை ஏற்படுத்துவது எமது இலக்காகும். அதன் மூலம் புதிய பேரண்டப் பொருளாதார சந்தை வாய்ப்புக்கான போட்டியில் நாமும் முன்னேறக் கூடியதாக இருக்கும்.

சமூக சந்தைப் பொருளாதார கொள்கைகள் சிறப்பான நிறுவனங்களையும் பலமான சந்தை அமைப்பையும், சமூகமான சமூகத்தையும் உருவாக்க உத்வேகமளிக்கும். நிலைபேறான கொள்கைகள் சக்திமிக்க சந்தைக் கட்டமைப்பொன்றையும், நீதியான சமூகக் கட்டமைப்பொன்றையும் ஏற்படுத்தும். தனியார் துறையினருக்கும் இதில் முக்கிய பங்குண்டு. கூடிய உற்பத்தித் திறனைப் பெற்றுக் கொள்ளல், புதிய உற்பத்திமுறைகள், உற்பத்திகளின் தரத்தை அதிகரித்தல் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரித்தல் என்பனவும் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். பொருளாதாரத்தை போட்டிச் சூழல் கொண்டதாக மாற்றியமைப்பதற்கு நாம் தனியார் துறையினருடன் ஒன்றிணைய வேண்டியுள்ளது. அதன் மூலம் வெற்றிகரமான சர்வதேச வாய்ப்பொன்றை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

போட்டிப் பொருளாதார வாய்ப்பு மற்றும் சமூக நலனோம்பல் என்பன குறித்த சந்தை வாய்ப்பின் கொள்கை வகுப்புகளின் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும். தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தி சுபீட்சம் மற்றும் சௌபாக்கியத்தை அடைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவோம். பல்துறை சார் துரித அபிவிருத்தியொன்றை உருவாக்கி, தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ செயற்திறன்மிக்க வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்ந்து, தரமானதும், சர்வதேசத்தில் சந்தை வாய்ப்புகள் கூடியதுமான உற்பத்திகளை அதிகரித்து, அதனுடன் இணைந்ததாக உள்நாட்டின் தனியார் பங்களிப்பை வளர்த்துக்கொள்வதும் எமது நோக்காகும். வளர்ச்சி, தன்னிறைவுப்பொருளாதாரம் என்பவற்றின் நிறுவன மற்றும் கொள்கை மறுசீரமைப்புகள் மூலம் உற்பத்திகளை அதிகரித்து சந்தை வாய்ப்புகளை அதிகரித்துக் கொள்வதும் எமது நோக்காகும்.

ஆற்றல்மிகு நடுத்தர பொருளாதார வர்க்கத்தினராக பொதுமக்களை முன்னேற்றுவது அரசாங்கத்தின் இலக்காகும். சமூகப் பொருளாதார வழிமுறையில் உச்சத்தை அடைந்து கொள்ளக் கூடிய நடுத்தர வர்க்கமொன்றை உருவாக்கி, நீதியான முறையில் அரச தொழில்வாய்ப்புகளைப்பெற்றுக் கொள்ளவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் நாம் முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

மிகவும் பலனுள்ள சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல் புதிய உள்நாட்டு வருமானச் சட்டமூலம், வெளிநாட்டுச் செலாவணி சட்டமூலம், தமது வருமானம் தொடர்பில் சுயவிருப்பில் தகவல் அளிக்கும் சட்டமூலம், அரச காணி மற்றும் வங்கிச் சட்டமூலம், குப்பைகளை கண்டபடி கொட்டுதல் தொடர்பான சட்டமூலம், அரச வர்த்தக பொதுமுயற்சிகள் சட்டமூலம், விமான நிலைய மற்றும் துறைமுகங்கள் சட்டமூலம், ருஹுணை பொருளாதாரக் கூட்டுத்தாபன சட்டமூலம், காணி (சிறப்பு) சட்டமூலம், நிலைபேறான அபிவிருத்திக்கான சட்டமூலம், பொறுப்புகளை முகாமைத்துவம் செய்யும் சட்டமூலம் மற்றும் தேசிய கடன் முகாமைத்துவ சட்டமூலம் என்பன வர்த்தக சிநேகபூர்வ சூழல் ஒன்றை ஏற்படுத்தும். அது வெற்றிகரமான வர்த்தக முயற்சிகளுக்கான சிறந்த பின்புலமாகும்.

# 05. பேரண்டப் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்

சக்திமிக்க நிதிவளம், பொருத்தமான நிலையான விலை மற்றும் சந்தைவாய்ப்பை அடிப்படையாகக்கொண்ட செலாவணி வீதம் என்பன எமது பேரண்டப் பொருளாதாரத்தின் மூன்று முக்கிய தூண்களாகும்.

**வளர்ச்சிக்கான சிக்கல்கள்: அரச நிதி தொடர்பான பொறுப்பு மற்றும் வரவு செலவுப்பற்றாக்குறை, அரச கடன்கள்** இலங்கையின் வரி வருமானம் 2015ம் ஆண்டுவரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தது. நடுத்தர பொருளாதாரத்துடன் ஒப்பிடுகையில் குறைந்தளவு வரியே அறவிடப்பட்டது. வரவு செலவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் பெற்றுள்ள கடன் மொத்த தேசிய உற்பத்தியில் 79.3 வீதத்தை கொண்டிருக்கின்றது. நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் திறைசேரிக்கு பெரும் சுமையாகும். எனவே 2018ம் ஆண்டளவில் வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச்செலுத்துவதற்காக உறுதிமிக்க பொருளாதார கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

**நடுத்தர அரச கடன்களை குறைத்துக்கொள்வதற்காக வருமான அடிப்படையிலான பொருளாதாரக் கட்டமைப்பொன்றை பேணுதல்** இதன் பிரகாரம் வரி அறவிடும் முறை மறுசீரமைக்கப்படும். மொத்த தேசிய உற்பத்தியில் வரிகள் மூலமான வருமானம் 16 வீதமாக்கப்படும். வரிச்சலுகை, வரிநீக்கம் மற்றும் விசேட விகிதாசாரம் என்பன ஒழுங்கமைக்கப்பட்டு நீதியானதும், செயற்திறன் மிக்கதுமான வரி அறவிடும் முறையொன்று ஏற்படுத்தப்படும். மிகவும் நீதியான, முற்போக்கான வரிமுறையொன்று ஏற்படுத்தப்படும். தற்போது 20:80 விகிதத்தில் நடைமுறைப்படுத்தப்படும் மறைமுக வரிமுறையானது 40:60 விகிதமாக மாற்றியமைக்கப்படும். வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக வரி அறவிடப்படாத வருமான வழிமுறைகள் ஏற்படுத்தப்படும்.

**அரச செலவினங்கள் ஒழுங்கமைக்கப்படும்** அரசாங்கத்தின் அரச நிதி முகாமைத்துவ பொறுப்பு சட்டமூலத்தின் ஊடாக கட்டாய இலக்குகளை நிர்ணயித்து வருமானக் குறைகள் மற்றும் மொத்த அரச கடன்கள் என்பன ஒழுங்கமைக்கப்படும். அரச பொதுதொழில் முயற்சிகள் நிறுவனங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து, அவற்றை இலாபகரமான அமைப்புக்களாக மாற்றுதல், அதற்காக அதனை மறுசீரமத்தல்.

**வளர்ச்சிக்கான செயற்திட்டத்தை வலுப்படுத்துவதற்காக நிலைபேறான நிதிவளத்தைப் பேணுவது அரசாங்கத்தின் நோக்கமாகும்** நடுத்தர மற்றும் நீண்ட கால தன்னிறைவுப் பொருளாதார இலக்குகளை நிர்ணயித்து முதலீட்டு வாய்ப்புகள் அதிகரிக்கப்படும். 2018ம் ஆண்டு முதல் வரவு செலவுத்திட்டத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச்செலுத்த வழி செய்யப்படும்.

**உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களின் பொறுப்பு தொடர்பான மூலோபாய முகாமைத்துவம் ஏற்படுத்தப்படும்** 2020ம் ஆண்டளவில் அரச கடன்களை மொத்த தேசிய உற்பத்தியில் 70வீதமாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**பரந்தளவிலான அரச முதலீட்டு வாய்ப்பின் ஊடாக அபிவிருத்திக்கான முதலீட்டு செலவு முன்னுரிமை அடிப்படையில் அதிகரிக்கப்படும்** இதற்கேற்ப 2017-2020ம் ஆண்டுக் காலப்பகுதியில் அரசாங்க முதலீடு மொத்த தேசிய உற்பத்தி 5-6 வீதமாக அதிகரிக்கப்படும். கடந்த காலங்களை போன்று கட்டிடங்களை மாத்திரம் நிர்மாணிக்காமல் கல்வி, சுகாதாரம், ஆய்வு மற்றும் ஆராய்ச்சி, தொழில்பயிற்சிகளுக்கான மனித வள அபிவிருத்திக்காக இந்த முதலீடு பயன்படுத்திக் கொள்ளப்படும்.

**கடந்த காலத்தில் அந்நிய செலாவணி விகிதம் நீண்ட கால அபிவிருத்தியில் பாதிப்பேற்படுத்தியது** பாரியளவிலான கடன்கள் காரணமாக கட்டுப்பாடற்ற பணவீக்கம் அதிகரித்தது. இலங்கை மத்திய வங்கியினாலும் அதனை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமற் போனது. அதன் காரணமாக கடன் சுமை அதிகரித்தது. கடன்களைச் செலுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டது. காலம் கடந்த நிலையில் அதனை ஒழுங்குமுறைப்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் பொருளாதார சக்கரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது. முதலீட்டாளர்களின் நம்பிக்கையும் சிதைக்கப்பட்டது.

**விலைக்கட்டுப்பாடு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தும்** உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பின் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளைத் தணிப்பதற்கு அரசாங்கம் இரண்டு வழிகளில் போராட வேண்டிய நிலையில் உள்ளது. உள்நாட்டு வழங்கல் மற்றும் விநியோக வலையமைப்பை ஒழுங்கமைப்பதும், உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப்பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து போட்டி மற்றும் நியாய விலையில் விற்பனை செய்வது அரசாங்கம் கடைப்பிடிக்கும் வழிமுறையொன்றாகும். அதன் மூலம் நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் விலைக்கட்டுப்பாட்டை பேணிக்கொள்ள முடியும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள இலங்கை மத்திய வங்கி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. குறைந்த பணவீக்கத்தை பேணிக்கொள்வதனூடாக பொருளாத நடவடிக்கைகளையும் போட்டித்தனமைகளையும் மேம்படுத்திக்கொள்ளலாம்.

**அந்நியச்செலாவணி வீதத்தை கேள்வி நிரம்பலோடு தீர்மானித்தல்** செலவை வெளிக்காட்டும் வகையில் பொருட்களை தேர்வுசெய்தல் மற்றும் விற்பனை செய்தல் இதன் மூலம் நடைபெறும். இலங்கையின் ஏற்றுமதிகளை போட்டி அடிப்படையில் சர்வதேச சந்தையில் முன்வைக்க முடியும். மிகவும் நெகிழ்வான செலாவணி விகிதம் ஒன்றினூடாக வெளிநாட்டு நிதிக்கையிருப்பை அதிகரித்து வெளிச்சக்திகளின் தாக்கத்திலிருந்து பொருளாதாரம் பாதுகாக்கப்படும்.

# 06. வளர்ச்சியை வலுப்படுத்தல்

தனியார்துறையினரை வலுப்படுத்தி வளர்ச்சி உறுதிப்படுத்தப்படும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கான ஊக்குவிப்பும் உத்தரவாதமும் வழங்கப்படும். ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட புதிய வர்த்தக கொள்கையொன்றின் மூலம் வர்த்தக நடவடிக்கைகள் புதிய வழிமுறையில் முன்னெடுத்துச்செல்லப்படும்.

**முதலீட்டு வாய்ப்புகளுக்கான குறைபாடுகள்** இலங்கை அபிவிருத்தியின் பிரதான செயற்பாட்டாளர் தனியார் முதலீடுகளாகும். வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர் அதற்கான உறுதுணையை வழங்குகின்றார். முதலீட்டு செயன்முறையில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக பாரிய நிறுவனங்களின் பரம்பல் மற்றும் புதிய முதலீடுகள் என்பன பின்தள்ளப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையும் அதே நிலையில் வீழ்ச்சியடைந்துள்ளது. தனியார் துறை வளர்ச்சி குறுகிப் போயுள்ளது. 2009ம் ஆண்டு தொடக்கம் வெளிநாட்டு முதலீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியை எதிர்கொண்டன. மொத்த தேசிய உற்பத்தி 1.1 வீதமாக காணப்பட்டது. முதலீட்டாளர்கள் பெரும்பாலும் காணி, பெருந்தோட்டத்துறைகள் மற்றும் கலப்பு முயற்சிகளில் முதலீடு செய்யத் தலைப்பட்டனர். எதிர்வரும் காலங்களில் தரமான முதலீட்டாளர்களை இலங்கைக்கு அழைத்துவருவதற்கான பின்புல ஒத்துழைப்பு வழங்கப்படும்.

→ **சட்ட ரீதியான மற்றும் நிர்ணய வேறுபாடுகள் மூலம் வியாபாரங்களை முன்னெடுத்துச் செல்லும் வசதிகள் தொடர்பான பூகோள தரப்படுத்தல்களின் அடிப்படையில் இலங்கையை முதல் 70 நாடுகளுக்கு உள்வாங்கல்.** வியாபாரத்துக்கு பொருத்தமான சூழலை ஏற்படுத்திக் கொள்வதற்காக மறுசீரமைப்பினை மேற்கொள்வது அவசியம் என முதலீட்டு மறுசீரமைப்பு செய்வதற்கான செயலணி மூலம் இனங்காணப்பட்டுள்ளது. 20க்கும் அதிகமான அரச பணியகங்களை ஒன்றிணைத்து மேலாண்மை பணிப்பாய்வினை நவீனமயப்படுத்தல் மற்றும் முதலீட்டு சூழலினை விருத்தி செய்வதற்காக வியாபாரங்களை பதிவு செய்வதற்காக வேண்டி தனி நுழைவுடன் கூடிய மாதிரி ஒன்றினை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

→ **முதலீட்டு கொள்கை முன்மாதிரி விருத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களை உற்சாகப்படுத்தும் கொள்கையினை முறைப்படுத்தல் மற்றும் மறுசீரமைப்பு செய்ய உள்ளோம்.** வரியில் இருந்து விடுபடுபடுவதனை இடைநிறுத்தி விட்டு வேறு செயற்றிறனை விருத்தி செய்யும் செயன்முறைக்கு செல்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இப்புதிய முதலீட்டு மாதிரியின் மூலம் கொள்கை பொருத்தப்பாடு மற்றும் முழு வியாபார சூழலினையும் விருத்தி செய்வதற்கு அவசியமான செயன்முறையினை முறைப்படுத்தப்படுவது உறுதிசெய்யப்படுவதுடன், வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்களை கவர்வதாகவும் இருக்கும். உறுதியான நிர்ணயங்கள் உட்படுத்தப்பட்ட முறையான ஊக்குவிக்கும் செயன்முறையொன்றை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வூக்குவிப்பு முதலீட்டு வழியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பௌதீக முதலீட்டுடன் நேரடியாக சம்பந்தப்படுத்தப்படுவதுடன், நவீன தொழில்நுட்பம், புதிய உற்பத்திகள் மற்றும் மென்பொருள் கம்பனிகளுக்காக பொருத்தமான முறையில் திட்டமிடப்பட்ட ஊக்குவிப்புகள் பெற்றுக் கொடுக்கப்படும். இவ்வூக்குவிப்புகள், இலங்கைக்கு பொருத்தமான முதலீடுகளை கவர்ந்து கொள்வதற்கான ஊக்குவிப்புகளுக்கு சமனானவையாகும்.

→

**அரச-தனியார் கூட்டு முயற்சிகள் வலுப்படுத்தப்படும்** நீண்ட கால வரி ஒப்பந்தம் மற்றும் அரச வளங்களும், சேவைகளுக்குப் பதிலாக அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் கூட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்கும் அரசாங்கம் ஊக்குவிப்பை வழங்கும். அதற்கான ஒழுங்குபடுத்தல்களையும் மேற்கொள்ளும். போக்குவரத்து, சக்தி வளங்கள், குடிநீர், கழிவு முகாமைத்துவம், தொழில்பேட்டைகள் என்பன போன்ற பொதுவசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் இந்த முறையில் நடவடிக்கை மேற்கொள்ளும். இதே வழிமுறையை சுற்றுலா, பொழுதுபோக்குகள், கல்வி, விமானநிலையம் மற்றும் துறைமுகங்கள் போன்றவற்றிலும் கடைப்பிடிக்க முடியும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

**சிறு மற்றும் நடுத்தர தொழில்துறைகளை ஒன்றிணைத்தல்** இத்தொழிற்துறையை வளர்த்தெடுப்பதற்காக உள்நாட்டு தனியார்துறையினர் ஊக்குவிக்கப்படுவர். அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து புதிய சந்தை வாய்ப்புகளை தேடிக்கொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். நிகழ்ச்சித் திட்ட அடிப்படையில் கடனுதவிகளையும் வரிச்சலுகைகளையும் வழங்கும். அறிவு மற்றும் தொழில்ஞானத்தை பரிமாறிக் கொள்வதற்கு மேலதிகமாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களின் ஒத்துழைப்பும் இந்த வர்த்தகர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும்.

**இலங்கை ஏற்றுமதி சந்தைக் கொள்கையினுள் காணப்படுகின்ற எதிர்ப்பு ஏற்றுமதி போக்கு காரணமாக தலா தேசிய வருமானத்தில் ஏற்றுமதி பிரிவு குறைந்துள்ளது.** சர்வதேச ஏற்றுமதிச் சந்தையில் 2000ம் ஆண்டு இலங்கைக்கு 0.9வீதம் மட்டுமே வாய்ப்புக் கிடைத்திருந்தது. 2016ம் ஆண்டளவில் அது 0.6 வீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. உள்நாட்டு மதிப்பீட்டில் 2000ம் ஆண்டு 33.3 வீதமாக இருந்த ஏற்றுமதி 2016ம் ஆண்டில் 12.7 வீதமாகியிருந்தது. ஏற்றுமதியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. அத்துடன் தரம் குறைந்த ஒருசில பொருட்களில் மட்டுமே ஏற்றுமதி வர்த்தகம் தங்கியுள்ளது. இத்துறையில் பன்முக முயற்சிகள் பரீட்சிக்கப்படவில்லை. சர்வதேச சந்தை வாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட உற்பத்திகள் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.

**நாங்கள் தேசிய ஏற்றுமதி செயன்முறையின் அடிப்படையில் புதிய வர்த்தக வழிமுறைகளை உருவாக்கல்** நல்லாட்சி அரசாங்கம் மிகவும் தாராளமய, வெளிப்படையானதும் நம்பிக்கையானதுமான வர்த்தக வழிமுறையொன்றை அறிமுகப்படுத்தும். இந்த வழிமுறையின் கீழ் ஏற்றுமதியில் நாட்டம் கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்க நடவடிக்கை எடுக்கப்படும். வர்த்தகம் தொடர்பான சுங்க செயற்பாடுகள் வெளிப்படையாகவும், செயற்திறன் மிக்கதாகவும் மேற்கொள்ளப்படும். சர்வதேச சந்தைக்கு பொருட்களை அனுப்புவதற்கு ஏற்ற வகையில் தரமான பொருட்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்படும்.

**சுங்கத் தீர்வைக் கட்டணங்கள் இலகுபடுத்தப்படும்** வர்த்தகர்களுக்கான சுங்கத் தீர்வைக் கட்டணம் இலகுபடுத்தப்படும். போட்டித்தன்மை மற்றும் வர்த்தக சுதந்திரத்தை வணிகர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**உள்நாட்டு நிறுவனங்கள் மற்றும் ஊழியர்களுக்கு சலுகைகள்** உள்நாட்டு நிறுவனங்கள் மற்றும் அதன் ஊழியர்களுக்கு அரசாங்கத்தின் ஏற்பாட்டில் பயிற்சிகள் வழங்கப்படும். உள்நாட்டு வர்த்தக முயற்சிகளை போட்டித்தன்மைக்கு ஈடுகொடுக்கும் வகையில் மாற்றியமைத்தல் இதன் நோக்கமாகும்.

**சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள்** பொருட்கள், சேவைகள் மற்றும் முதலீடுகள் தொடர்பில் சீனா, சிங்கப்பூர் மற்றும் இந்தியாவுடன் புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். வேறு நாடுகளுடனும் அவ்வாறான வாய்ப்புகள் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தும். 6,000 அளவிலான பொருட்களை ஜீஎஸ்பி பிளஸ் சலுகை ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும். ஜீஎஸ்பி பிளஸ் சலுகை கிட்டியுள்ளதன் பின்னர் ஐரோப்பிய சந்தைகள் வரை இலங்கையின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தல் தொடர்பில் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது. இதற்கிடையே ஒட்டுமொத்த ஏற்றுமதி போட்டிக்கு தாக்குப்பிடிக்கும் வகையில் இலங்கை ஒருதலைப்பட்ச வர்த்தக மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் வலுப்படுத்தப்படும்** இலங்கை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை மேம்படுத்தலோடு ஏற்றுமதிகளை அதிகரித்துக் கொள்ள முடியுமாக இருக்கும்.

**ஏற்றுமதியில் பன்முகத்தன்மை உருவாக்கப்படும்** வர்த்தகம் தொடர்பான உலகின் உயர் புலமையை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும். ஏற்றுமதியை சர்வதேச மட்டத்தில் பேணிக் கொள்ளும் வகையில் தொழில்நுட்ப மற்றும் புலமைச்சொத்தினை (1PR) அடிப்படையாக் கொண்ட கம்பியூட்டர் வழி தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும். இதற்காக, அறிவுசார் புற செய்விப்பு (KPO) மற்றும் வர்த்த ரீதியிலான புறச்செய்விப்பு (BPO) நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும்.

**இலங்கை சர்வதேச வர்த்தகத்தின் கேந்திர நிலையமாகும்** இலங்கையின் அமைவிடத்தைப் பொறுத்தவரையில் அது வர்த்தகப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றி இறக்குவதற்கான கேந்திர நிலையமாகும். அரச மற்றும் தனியார் வர்த்தம் என்பது அதற்கான வழிப்பாதையாகும். அதன் மூலம் சர்வதேசத்துடன் இலகுவாக கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ள முடியும் என்பதை அரசாங்கம் அறிந்துள்ளது. கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு மற்றும் கிழக்கு இறங்குதுறைகளை அதற்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இலங்கை துறைமுகங்களினூடாக உலகின் கிழக்கிற்கும் மேற்குக்குமான வர்த்தக இணைப்பாகவும் புதிய தொழிற்பாட்டு சுங்கத்தீர்வை உருவாக்கப்படும்.

**முழுமையான ஆற்றலுடன் சுற்றுலாத்துறையினை செயற்படுத்தல்** இலங்கையின் சுற்றுலாத்துறையானது அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய வருமான வழிமுறைகளில் ஒன்றாகும். சுமார் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் மூலமாக 350 கோடி அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளமை அதற்கான சான்றாகும். கூடுதல் முதலீடுகள் மற்றும் தொழில்வாய்ப்புகள் மூலமாக இத்துறையை மேலும் அபிவிருத்தி செய்யலாம். அரசாங்கத்தின் அமைச்சு, நிறுவனங்கள் மற்றும் இத்துறை சார்ந்தோரிடையே காணப்படும் இடைவெளி சுற்றுலாத்துறையின் பெரும் பலவீனமாகும். கொள்கை, நலனோம்புகை செயற்திட்டங்கள் காரணமாகவும், வர்த்தகத்துறை முறைகேடுகள் மற்றும் வீழ்ச்சி காரணமாகவும் சுற்றுலாத்துறையானது குறிப்பிடத்தக்க சில துறைகளில் மட்டுமே செயற்பாட்டுடன் காணப்பட்டது. மனிதவள அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை ஆராய்ச்சிகளில் குறைபாடுகள் என்பன அதன் வளர்ச்சிக்கான தடைக்கற்களாகும்.

**சுற்றுலாத்துறையின் தந்திரோபாய திட்டத்திற்கேற்ப செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்** இலங்கையின் இயற்கை மற்றும் கலாசார மரபுரிமைகளை வெளிக்காட்டும் சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் ஊடாக இலங்கையை சுற்றுலாத்துறையில் முன்னணி நாடாக மாற்றியமைக்க முடியும். புதிய புதிய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளை தருவித்துக்கொள்வதற்கும், புதிய உற்பத்திகளை அவர்களுக்கு சந்தைப்படுத்தவும், தனியார் துறையினருக்கு ஊக்குவிப்பு வழங்கப்படும்.

**சுற்றுலாத்துறையில் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சிகள்** சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் சுற்றுலாத்துறையின் 90% சேவைகளை வழங்குகின்றன. அந்தவகையில் தங்கள் தொழிற்துறையை மேம்படுத்திக் கொள்ள அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுதல் அவசியமாகும்.

**கடல் மற்றும் விமானப் போக்குவரத்து வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குதல்** உள்நாட்டு விமான சேவைகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடல் போக்குவரத்துப் படகுகள் மற்றும் பாரிய படகுகள் சேவைகளை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும். மத்தளை சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் கலாசார மற்றும் சுற்றுலா வலயம் ஒன்று தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

**சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு தனியார் துறையின் ஈர்ப்பு** கொழும்பு, காலி,மாத்தறை மற்றும் தங்காலையில் பாரம்பரிய மரபுரிமைகளாக கருதப்படும் தொல்பொருள் பெறுமதிமிக்க கட்டிடங்கள் இதற்குள் அடங்கும். குறித்த நகரங்களில் காணப்படும் கோட்டைகள் அவ்வாறான ஸ்தலங்களாகும். கொக்கல மற்றும் மாத்தறை பிரதேசங்கள் கொல்ப் விளையாட்டுக்குப் பொருத்தமான பிரதேசங்கள் என்பதாக இனம் காணப்பட்டுள்ளது.

கொக்கல கடல் சார் நூதனசாலை அவ்வாறான இன்னும் ஓர் இடமாகும். நாட்டைச் சுற்றியுள்ள அழகான கடற்கரை தவிர நாட்டின் உட்பகுதியில் கலாசார முக்கோணப் பிரதேசங்களும் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தெடுக்கும் இன்னொரு வலயமாகும். இதன் அடிப்படையில் போகம்பர கலாச்சார மற்றும் சுற்றுலா மத்திய நிலையம் மற்றும் மத்தள சுற்றுலாதளம் என்பவற்றை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# 07. காணி, தொழிலாளர்கள் மற்றும் முதலீடு

சுற்றுலாத்துறை அபிவிருத்தியை முன்னிட்டு இத்துறைகளில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

**காலத்துக்குப் பொருந்தாத இலங்கையின் காணிக் கொள்கைகள்** சிக்கலான பிரச்சினைகள் காரணமாக இலங்கையின் காணி வர்த்தகத்துறை மதிப்பிழந்து போயுள்ளது. அதில் வளர்ச்சி எதனையும் காணமுடியவில்லை. செயற்திறனும் அற்றுப் போயுள்ளது. வளர்ச்சியும் அற்றுப் போயுள்ளது. காணி உறுதிப்பத்திர பதிவுகள், நீதிமன்ற செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகள், உரிமை தொடர்பான சிக்கலான விதிகள், காணிகள் தொடர்பான நம்பகமான தகவல் பதிவுகள் இன்மை என்பன இதன் குறைபாடுகளாகும். இவ்வாறான சிக்கல்கள் காரணமாக தனியார் முதலீடுகளும் தயக்கத்தைக் கொண்டுள்ளன. செயற்திறனான முறையில் காணியொன்றைக் கொள்வனவு செய்து கொள்வது கடினமாக உள்ளது. அத்துடன் காணிகளைத்துண்டுபடுத்தி விற்பனை செய்யும் முறை காரணமாக ஒருசிலபகுதிகளில் காணிகள் அறவே பெறுமதியற்றவையாகிப் போயுள்ளன.

**காணி வர்த்தகச் சந்தையை மறுசீரமைத்தல்** பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்கான உரிமைகளில் காணப்படும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும். அதற்கான தெளிவான உறுதிகள் வழங்கப்படும். காணி வர்த்தகத்தில் தடையாக காணப்படும் இந்த விடயம் சீரமைக்கப்படும். இலங்கையின் மிகப்பெரிய காணி உரிமையாளர் அரசாங்கமாகும். அந்த வகையில் காணி வர்த்தகத்தில் அரசாங்கமும் ஒரு போட்டியாளராக களமிறங்கும். குறித்த காணிச்சட்ட சீரமைப்புக்கு ஒன்றிணைந்த மறுசீரமைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இம்முயற்சிக்கு வசதிகளை வழங்குவதற்காக வேண்டி காணி வங்கி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

**காணி பகிர்ந்தளிப்பின் ஊடாக பரந்துபட்ட அபிவிருத்தி** அரசாங்கம் பாரிய பொருளாதார அபிவிருத்தி வலங்கள் ருஹுணு மற்றும் வயம்ப மற்றும் கொழும்பு சர்வதேச வர்த்தக நிலையமாக மாற்றியமைத்தல், நகர அபிவிருத்தியின் கீழ் மெகாபொலிஸ் செயற்திட்டத்தை முன்னெடுத்தல் என்பவை இவற்றுள் பிரதானமானவையாகும்.

**காணிகள் தொடர்பில் விஞ்ஞானரீதியான வழிமுறைகள்** அரசாங்கம் காணி நிர்வாக நடவடிக்கைகளை மேம்படுத்தி, நவீனமயப்படுத்தும். தேசிய, வலய, பிரதேச ரீதியாக காணிகள் வகைப்படுத்தப்படும். காணிப் பதிவுகள் டிஜிட்டல் முறைக்கு மாற்றியமைக்கப்படும்.

**தொழிலாளர் சந்தையின் குறைபாடுகள்** முதுமையடையும் மக்கள் தொகை காரணமாக தொழிலாளர் சந்தை குறுகிக் கொண்டு செல்கின்றது. காலத்துக்குப் பொருந்தாத தொழிலாளர் சட்டங்கள் காரணமாக உற்பத்தி மற்றும் சர்வதேச போட்டித்தன்மையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

**தொழில் சந்தையில் பெண்களின் பங்களிப்பு விகிதத்தினை அதிகரிப்பதற்கு வசதிகளை செய்து கொடுத்தல்.** சிறந்த முறையிலானதும், அனைவராலும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையிலும் பிள்ளைகளுக்கான பராமரிப்பு வசதிகளை மேம்படுத்தல். தனியார் துறையினரையும் இணைத்துக் கொண்டு தாய்மாருக்கான நிவாரண திட்டங்கள், பகுதி நேர வேலை வாய்ப்புக்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள், நெகிழ்ச்சித் தன்மையான தொழில்வாய்ப்புகள் முன்னெடுக்கப்படும்.

**தனியார் துறை ஆற்றல் மேம்பாடு** தனியார் துறையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் அவர்களுக்கு தேசிய மட்டத்திலான தகைமைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**வெளிநாட்டுத் தொழில்சந்தை** உள்நாட்டில் தொழிலாளர் பற்றாக்குறை நிலவாத துறைகளில் மட்டும் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். குறித்த துறைகள் கூடுதலான அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் துறைகளாக இருக்க வேண்டும்.

**நாட்டின் அபிவிருத்தி செயன்முறைக்கு பங்களிப்பு செய்வதற்கு அரசாங்கம் சர்வதேசத்தில் வாழும் இலங்கையர்களுக்கு அழைப்பு விடுத்தல்.** இதன் ஊடாக உருவாகின்ற போட்டித் தன்மைமிக்க சந்தையினுள் பல்வேறு நன்மைகளை இலங்கைக்கு பெற்றுக் கொள்வதற்கு முடியும். அவற்றில் தகைமை பரிமாற்றல் மிகவும் துரிதமடைந்தது பிரதானமாகும். மேலும் இடம்பெயர்ந்த இலங்கையர்களின் சேவைகளினை பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்தினால் தமது கொள்கையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**நலிவடைந்த தொழில்துறைகள்** இலங்கையில் 40வீதமான தொழிலாளர்கள் நலிவடைந்த தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ளனர். சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அரசாங்கம் அவர்களின் தொழில்களை வகைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும். அதன் மூலம் அவர்களின் தொழிலுக்கான

**கொழும்பு துறைமுக நகரில் சர்வதேச நிதி மையத்தின் சேவைகளை வழங்குதல்** கொழும்பு துறைமுக நகரத்தை டுபாய் மற்றும் சிங்கப்பூர் இடையிலான நிதிப் பரிமாற்ற மையமாக அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் நோக்கமாகும். சமுத்திர, விமான, தொலைத்தொடர்புத்துறைகளில் இலங்கையானது இந்து மாசமுத்திரத்தின் கேந்திர நிலையமாக மாற்றியமைக்கப்படும்.

# 08. சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள்

கல்வியானது ஆற்றல் மற்றும் சுகாதார சேவைகளை இலக்காகக் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகள், டிஜிட்டல் மற்றும் நவீன வசதிகள் மேம்படுத்தப்படும்.

**கல்வி மற்றும் ஆற்றல் மேம்பாட்டில் குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்வதற்காக புலமையை அடிப்படையாகக் கொண்ட போட்டிச் சந்தை உருவாக்கப்படும்** உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் 10 வீதமானோரே இந்நாட்டின் பல்கலைக்கழகங்களுக்கான வாய்ப்பைப் பெறுகின்றனர். ஆற்றல் குறைபாடு மற்றும் பொருத்தப்பாடின்மை என்பன அவர்கள் மத்தியில் உள்ள பிரச்சினையாகும். அதாவது அவர்கள் பெறும் கல்விக்கும் தொழில்வாய்ப்புக்கும் பொருத்தம் இருக்காது. 2014-15ம் ஆண்டுகளில் கணனி மற்றும் தொழில்நுட்பத்துறையில் பல்கலைக்கழகத்தில் உள்வாங்கப்பட்டவர்களின் மொத்த பல்கலைக்கழக புதுமுக மாணவர்களில் 5 சதவீதத்துக்கும் குறைவாக இருந்தது.

**அனைவருக்கும் 13 வருடம் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக வசதிகள் செய்து கொடுக்கப்படும்.** பாடசாலைக் கல்வியின் பின்னர் மாணவர்கள் உயர்கல்வி, தொழில்கல்வி அல்லது தொழில்வாய்ப்புகளை நாடிச் செல்கின்றனர். எதிர்வரும் காலத்தில் க.பொ.த. சாதாரண தரத்தின் பின்னர் அனைத்து மாணவர்களுக்கும் தொழில் பயிற்சிகள் பெற்றுக்கொடுக்கப்படும். பாடசாலை ஆலோசனைக் குழுக்களை அமைத்து கல்வித்துறை மறுசீரமைக்கப்படும்.

**கல்விக்கான வாய்ப்புகளை அதிகரித்தல்** அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து தரமான தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்க ஊக்குவிப்பதும் அரசாங்கத்தின் நோக்கமாகும். அரச-தனியார் மாதிரி சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகங்களை நிறுவி பொருளாதாரம், அபிவிருத்தி, ஆய்வுகள் மற்றும் தொழில்துறை சார் நேரடிப் பயிற்சிகளை வழங்குவது அரசாங்கத்தின் நோக்கமாகும். தனியார் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களுக்காக வட்டியில்லாக் கடன் முறைமை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**தனியார் துறையின் பங்களிப்புடன் தொழிற்பயிற்சி** வேலைவாய்ப்பின்மை மற்றும் தகைமை குறை தொழில்வாய்ப்புகள் கூடுதலாக காணப்படும் மாவட்டங்களில் கூடுதலான தொழிற்பயிற்சி நிலையங்கள் நிறுவப்படும். அதற்காக அரசாங்கத்தின் வளங்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

**வர்த்தக திறமைகளை வெளிக்காட்ட இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்** சர்வதேச தொழில் சந்தையில் பல்வகையான தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான தொழிற்தகைமைகளை அரசாங்கம் இளைஞர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும். தனியார் துறையின் பங்களிப்புடன் இளைஞர்களுக்கான ஆலோசனை மற்றும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் துறையினருக்கு ஒத்துழைப்பு** செயற்பாட்டு ரீதியாக மாணவர்களுக்குத் தொழிற்கல்வியைப் பெற்றுக் கொடுத்து அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் நிறுவனங்களுக்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

**சுகாதாரப் பாதுகாப்பை அதிகரித்தல்** தனியார் துறையின் மருத்துவ சேவைகள் மீதான ஒழுங்குபடுத்தல் பலவீனமானதாகக் காணப்படுகின்றது. தனியார் மருத்துவத்துறையினர் வயோதிகர்களுக்கான சுகாதார சேவைகளின் போது அதிக கட்டணம் அறவிடுகின்றனர். எனவே இது தொடர்பில் செலவாகும் தொகை மற்றும் விதிகள் தொடர்பில் மறுசீராய்வு செய்யப்பட வேண்டும். 2014ம் ஆண்டு தொற்றாத நோய்கள் காரணமாக மரணத்தைத் தழுவியவர்களின் எண்ணிக்கை 75 வீதமாகும். பொதுமக்களின் சுகாதாரத் தேவைகளுக்காக மொத்தத் தேசிய உற்பத்தியில் 3-4 வீதம் வரை செலவிடப்பட்டிருந்தது. தனியார் துறையினரின் செலவினங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

**தொற்றாத நோய்களைக் குணப்படுத்தும் செயற்பாடுகள் வலுப்படுத்தப்படும்** தொற்றாத நோய்களை குணப்படுத்துவதற்கான செயற்பாடு அரசாங்கத்தினால் நான்கு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. புகை மற்றும் மதுபானப் பழக்கம், உடல்பருமன், துரித உணவுவகைகள், உடற்பயிற்சியற்ற வாழ்க்கை முறை என்பன மனிதர்களுக்குப் பெரும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

**உயிர் கொல்லி சிறுநீரக வியாதி நிவாரண வேலைத்திட்டங்களுக்காக நாம் நிதியுதவி வழங்குவோம்.** இந்நோய்க்கான சிகிச்சைக்குத் தேவையான வசதிகளில் கடந்த வருடம் 30-50 வரையான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டது. உலகின் தலைசிறந்த ஆய்வு நிலையங்களுடன் இணைந்து இதனைக் கட்டுப்படுத்தவும் ஊழியர்களைப் பயிற்றுவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குடிநீரின் தரம் குறித்து பரிசோதிப்பதற்கான அநுராதபுரத்தில் ஆய்வு கூடம் ஒன்றும் நிறுவப்பட்டது. அதன் மூலம் தண்ணீரில் கனமான உலோகங்கள் கலந்திருப்பது கண்டறியப்பட்டது. இதன் மூலம் முழுமையான செயற்பாடுகள் 2017 இல் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மதுபானப் பாவனை தொடர்பான புதிய சட்டங்கள்** சர்வதேச ஏற்புகளின் அடிப்படையில், மதுபானத்தில் காணப்படுகின்ற போதையின் அளவிற்கு அமைய மதுபான வரியினை அறவிடுவதற்கு ஏதுவான வகையில் குறித்த சட்டத்தை திருத்தம் செய்வது மற்றும் சட்ட விரோத போதைப்பொருள் பாவனையை குறைத்தல்.

**இலத்திரனியல் மருத்துவத் தகவல் சேவை** தனிநபர் மற்றும் குடும்ப அமைப்புகளின் மருத்துவத் தகவல்களை பெற்றுக் கொள்வதில் ஏற்படும் சிரமங்கள் காரணமாக நோய்நிலைமைகளின் போது சிகிச்சையளிப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. இதற்காக அனைத்துப் பிரஜைகளுக்கும் மருத்துவ அட்டையொன்றை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தனியார் பிரிவினரின் ஒத்துழைப்பும் இதற்கு பெற்றுக் கொள்ளப்படும்.

**அனைத்துப் பிரஜைகளுக்கும் மருத்துவ வசதிகளை உறுதிப்படுத்தல்** அனைத்துப் பிரஜைகளுக்கும் அவசர ஆபத்துகளின் போது மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு முன்பதாக அவரது உயிரைப் பாதுகாக்கும் வகையிலான முதலுதவிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தியாவின் சுவசெரிய ஆம்புலன்ஸ் சேவை 2016ல் ஆரம்பிக்கப்பட்டது. 1990 இலக்கத்தை அழைப்பதன் ஊடாக இந்த சேவையை உடனடியாக இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும். நாடு முழுவதிலும் இதனை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**உட்கட்டமைப்பு வசதிகளின்மை காரணமாக அபிவிருத்தியில் தடை** அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாரியளவான செயற்திட்டங்கள் பலவீனமான துறைகள் மற்றும் நிதி என்பன காரணமாக தோல்வியைத் தழுவியுள்ளன. போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகள், மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தித் திட்டம், மாத்தறை சாலி மவுண்ட் எஸ்டேட் தொழிற்பேட்டை, திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, சீதாவக்கை தொழிற்பேட்டைகள், கெரவலப்பிட்டிய கேஸ் நிலையம் மற்றும் மிதக்கும் இறங்குதுறையும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துமுகமாக ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களாகும்.

**அடிப்படை வசதிகளை இலக்காகக் கொண்ட போக்குவரத்து பிரிவிற்கு மேற்கொள்ளப்படும் முதலீட்டு வசதிகளை மேம்படுத்தல்** பண்டாரகம, வவுனியா, எம்பிலிப்பிட்டிய, குளியாப்பிட்டிய, ஏறாவூர் போன்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ள பொருளாதார வலயங்கள் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிக்கும். களனி பாலம் உட்பட 70 பாலங்களை விருத்தி செய்தல் அல்லது ஸ்தாபிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் குறிப்பிடத்தக்க அளவு போக்குவரத்து துறையில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், புகையிரத வீதிகள் நவீனமயப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகியவையும் திட்டமிடப்பட்டுள்ளது. மாத்தறை மற்றும் கதிர்காமம் ஆகிய நகரங்களுக்கு இடையில் புதிய புகையிரத வீதியொன்று நிர்மாணிக்கப்படுவது அதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

**அரசாங்கம் பொருளாதார நுழைவாயில்களை ஸ்தாபித்துள்ளது.** இலங்கையின் அனைத்து இனத்தவர்களும் நன்மை பெறும் வகையில் இந்த பொருளாதார நுழைவாயில் அமைக்கப்படும்.

- தென்மேற்கு பொருளாதாரப் பாதை, அதிவேகப்பாதையை பயன்படுத்தி காலி, ஹம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் கண்டி – கொழும்பையும் இணைக்கின்றது. அதன் இரண்டாம் கட்டம் பொதுஹெர தொடக்கம் தம்புள்ளை வரையிலான பகுதியை இணைக்கின்றது. இந்தப் பொருளாதாரப் பாதை தற்போதைக்கு கொழும்பு கட்டுநாயக்க மற்றும் மத்தளை விமானநிலையம், கொழும்பு-ஹம்பாந்தோட்டைத் துறைமுகங்கள் வரை யிலான பகுதிகயை இணைக்கின்றது.
- வடகீழ் பொருளாதாரப் பாதை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு வழிசெய்துள்ளது. மொரகஹகந்தை மற்றும் மல்வத்துஓயா நீர்த்தேக்கங்கள் நிர்மாணிக்கப்பட்டதும் அதன் முழுமையான பலன்கிட்டும்.
- நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களை தொடர்புபடுத்தி விவசாய மற்றும் சுற்றுலாத்துறை பொருளாதார வலயம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. கண்டி-கொழும்பு அதிவேகப் பாதை, மத்தளையிலிருந்து தென்னிலங்கை அதிவேகப் பாதையும் இதனுடன் இணைக்கப்படுகிறது..
- கொழும்பு - திருகோணமலை பொருளாதாரப் பாதை தொழில்நுட்ப அபிவிருத்திக்கு வழிசெய்துள்ளது.

**அனைவருக்கும் சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதார சேவைகள்** சிறுநீரக நோய் காரணமாக பரவலாக பாதிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களையும் கவனத்திற் கொண்டு தோட்டப்புறங்கள், கிராமங்கள், சிறுநகரங்கள் உள்ளிட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் குழாய்கள் மூலமான சுத்தமான குடிநீரை விநியோகிக்கும் நடவடிக்கை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. கற்பிட்டியில் நீரில் இருந்து உப்புத் தன்மையை பிரித்தெடுக்கும் செயற்பாட்டில் அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து செயற்படுகின்றன. வெலிவிட பிரதேசத்திலும் குடிநீர் விநியோக செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

**கிராமிய வருமானம் குறைந்த, நடுத்தர வர்க்கத்தினருக்காக வீடமைப்புத்திட்டம்** மேல்மாகாணத்தில் மட்டும் வீடில்லாத மக்கள் தொகை எண்ணிக்கை 24 லட்சமாகும். அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து காணி மற்றும் நிதி முதலீட்டில் வீடமைப்புத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளன.

தோட்டப்புற வீடமைப்புத்திட்டங்களையும் மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

**பொதுப்போக்குக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தல்** பொழுதுபோக்கு இடங்கள் மற்றும் ஏனைய வசதிகளும் கொண்டதாக போக்குவரத்து மையங்களை உருவாக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. வேயாங்கொடை தொடக்கம் பாணந்துறை வரையிலான மின்சார ரெயில் போக்குவரத்து, களனிப் ரெயில் பாதையை இரட்டைப் பாதையாக மாற்றியமைப்பதுடன், தம்புள்ளை ஊடாக குருணாகலையில் இருந்து ஹபரண வரையான புதிய புகையிரதப் பாதையும் அமைக்கப்படும். பேருந்துகளுக்கான முன்னுரிமை வழிப்பாதைகளை அறிமுகப்படுத்துவது, போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்கான புதிய முறைகள் அறிமுகம் என்பனவும் இதில் உள்ளடங்கும்.


கொழும்பு நகரத்தை மையப்படுத்தி மெட்ரோ ரயில் எனும் பெயரில் இலகுரயில் சேவையொன்று அறிமுகப்படுத்தப்படும். ஆறுவழிப்பாதைகளைக் கொண்ட இந்தப் புகையிரத சேவையின் திட்டமிடல் நடவடிக்கைகள் மிக விரைவில் நிறைவு பெறும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

**மாநகர அபிவிருத்தித் திட்டத்திற்கு இசைவாக நீண்டகால கட்டமைக்கப்பட்ட போக்குவரத்திற்கான பிரதான திட்டத்தைத் துரிதப்படுத்துவோம்.** மாநகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வருகின்ற முக்கிய அபிவிருத்தி செயல்முனைப்பெனில், பல்மாதிரி போக்குவரத்துக்கான நிலையமொன்றை அமைத்தல், புகையிரத சேவை மின்னூட்டலும் நவீனமயமாக்கலும் அரச, தனியார், பங்காண்மை அடிப்படையில் கழிவுபொருள்களிலிருந்து எரிசக்திப் பிறப்பாக்க கருத்திட்டங்கள், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு, மேற்கு இறங்குதுறைகள் அபிவிருத்தி, அறிவியல் பூங்காக்களை நிறுவுதல், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நவீனமயப்படுத்தல் அடங்கலான சில கருத்திட்டங்களாகும். அதேபோல், களனி ஆற்றுப்பள்ளத்தாக்கில் வெள்ள நீர்க் கட்டுப்பாடு போன்ற மாநகர வலயத்தினுள் வெள்ள நீர் அபாயத் தணிப்புக் கருத்திட்டங்கள் துரிதப்படுத்தப்படும்.

**நாடுபூராவும் சிறிய மற்றும் நடுத்தர அளவான உட்கட்டமைப்பு வசதிக் கருத்திட்டங்களை அமைத்து-முன்னெடுத்து-ஒப்படைக்கும் மாதிரிமுறையை அரசாங்கம் ஊக்குவிக்கும்.** இறுதியில் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்படும் நோக்குடன் அரசாங்கத்திற்கு குத்தகை விடக்கூடிய விதத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவான உட்கட்டமைப்பு வசதிக் கருத்திட்டங்களை அமைப்பதற்கு தனியார் துறையை பலப்படுத்துவோம்.

தற்போது அரசாங்கத்தினால் கட்டிடங்களுக்காக பெரும் தொகைப்பணம் செலவிடப்படும் கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய துறைகளில் இக்கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படும். அரசாங்கத்தினால் கட்டுமான நடவடிக்கைகளிலிருந்து மீதப்படுத்தப்படும் மூலதனம் தொழில்நுட்பவியலை முன்னேற்றுவதற்கும் அறிவு விருத்திக்கும் மனிதவள அபிவிருத்திக்கும் முதலீடு செய்யப்படும்.

பராக்கிரமபாகு அரசனின் காலத்திலும் இலங்கையானது, இந்து சமுத்திரத்தின் பேரண்டப் பொருளாதார கேந்திர நிலையமாக காணப்பட்டதாக வரலாறு சாட்சி பகர்கின்றது. 2025 தூரநோக்கு மூலம், மீண்டும் அவ்வாறான வளமான யுகத்தை நோக்கி நகர்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.


யாழ்ப்பாண முன்மாதிரி நகர அபிவிருத்தி
வட மாகாணத்தில் நிலையான மீன்வளர்ப்பு அபிவிருத்தி திட்டம்
யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் (கடல் நீர் உப்பு நீரகற்றல்)
குழாய் வழி சுற்றுலா வேலைத்திட்டம்
- கொழும்பு துறைமுகத்தில் உள்ள பாரம்பரிய கட்டிடங்கள்
- தெதுருஓயா கால்வாய் மற்றும் அக்குரல
- காலி துறைமுகத்திலுள்ள மேலதிக கட்டிடங்கள்
- காலி சிறைச்சாலை காணிகள்
- காலி கப்பல் தொகுதி
- கொக்கல கடல் விமான அருங்காட்சியகம்
- கொக்கல கொல்ப் திடல்
- மாத்தறை கொல்ப் திடல்
- மாத்தறை துறைமுகத்தில் உள்ள பாரம்பரிய கட்டிடங்கள்
- தங்கல்லை துறைமுகம்
- கலாச்சார முக்கோண சுற்றுலா விரிவாக்கத் திட்டம்
வவுனியா பல்கலைக்கழக அபிவிருத்தி
மன்னார் தகவல் தொழில்நுட்ப பூங்கா
திருகோணமலை பொருளாதார அபிவிருத்தி பிரதேசம்
மென்மையான உள்கட்டமைப்பு வளர்ச்சி
வடமத்திய மாகாண அபிவிருத்தி
- மல்வத்து ஓயா வேலைத்திட்டம்
- பிபிதமு பொலன்னறுவை வேலைத்திட்டம்
கப்பல்கள் மற்றும் பயணிகள் கப்பல்கள்
வடமேல் விசேட பொருளாதார அபிவிருத்தி பிரதேசம்
- இரணவில சுற்றுலாத்துறை அபிவிருத்தி
- கல்பிட்டி சுற்றுலாத்துறை அபிவிருத்தி
- பிங்கிரிய வலயம்
- குலியாபிட்டிய வலயம்
வடக்கு அதிவேகப்பாதை
உள்ளக விமான சேவை
மொரகஹகந்த அபிவிருத்தித்திட்டம்
நீரியல்வள உற்பத்தி தொழில்வலயம்
வேளாண்மை தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துக்கான கண்டி அபிவிருத்தி திட்டம்
போகம்பர கலாச்சார மற்றும் சுற்றுலா தளம்
கெரவலபிட்டிய எல்என்ஜி திட்டங்கள் மற்றும் மிதக்கும் முனையம்
கண்டி அபிவிருத்தி திட்டம்
தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தி
மேல்மாகாண பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்
ருஹுணு பொருளாதார அபிவிருத்தி பிரதேசம்
வர்த்தக வலயங்கள் மற்றும் மத்தளை சுற்றுலா வலயம்
இலகுரயில் முனையம்
கொழும்பு துறைமுகம் - கிழக்கு முனையம்/மேற்கு முனையம்
இரட்டை வழியாக்கப்படும் களனிப்பள்ளத்தாக்கு ரயில்பாதை
மத்தளை விமானநிலையம்
வர்த்தக வலயம்
சீதாவக்கை வர்த்தக வலயம் - களுத்துறை
ஹம்பாந்தோட்டை துறைமுகம்
மாத்தறை-கதிர்காம புகையிரதப் பாதை
ஹம்பாந்தோட்டை குழாய் வழி முதலீடு
(சுத்திகரிப்பு/LNG எரிவாயு/கப்பல் பட்டறை/சிமெண்ட்/தூண்கள்)
வர்த்தக வலயம்
சீதாவக்கை வர்த்தக வலயம் - களுத்துறை

# 09. தொழிநுட்பவியலும் டிஜிட்டல்மயமாக்கமும்

உலகளாவிய அளவில் போட்டியிடுவதற்கும் எண்ணிலக்க (டிஜிட்டல்) ரீதியாக பலப்படுத்தப்பட்ட பொருளாதாரமொன்றை நோக்கிப் பயணிப்பதற்கும் டிஜிட்டல் மற்றும் வேகமாக வளர்ச்சியடைந்துவரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்குமுகமாக உபாயமுறைகளை மேம்படுத்துவது நாட்டுக்கு அவசியமானதாகும். செலவு குறைந்த டிஜிட்டல் சூழல் தொகுதிகள் குறிப்பாக, சுயதொழில் முயற்சியாளர்களையும் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களையும் ஊக்குவித்து, நாட்டின் உள்ளக வளர்ச்சியும் தொழில் உருவாக்கமும் ஊக்குவிக்கப்படும்.

**விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகள் மந்தநிலை அடைந்துள்ளன.** இதுவரை பயன்படுத்தப்படாத தொழில்நுட்பத்தில் உயர் தரம் வாய்ந்த மென்பொருள்களுக்கு (Technologically Advanced High Quality Software Products) உலகளாவிய அளவில் பாரியதொரு கேள்வி நிலவுகிறது. உற்பத்தித்துறைக்கு அவசியமான தொழில்நுட்பத்தை விருத்திசெய்வதில் சம்பந்தப்பட்ட கொள்கைகளிலும் உபாயமுறைகளிலும் குறைபாடு நிலவுகிறது. மருந்துப்பொருட்கள், இலத்திரனியல், மருத்துவ உபகரணங்கள், வாகன உதிரிப்பாகங்கள் தொடர்பில் ஒத்துழைப்பும் கரிசனையும் குறைவாகக் காணப்படுவதுடன், தொகைக்கணிப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய அறிவுநிலையும் குறைவாக உள்ளது. எவ்வாறாயினும், தனியார்துறையினர் குறித்த துறையில் ஈடுபடுவதற்காக ஊக்குவிப்பட வேண்டியுள்ளது

2016 அளவில் இலங்கையின் தகவல் தொழில்நுட்ப அறிவு மட்டம் 27.5% சதவீதமாக இருந்தது. இணைய வசதிகள் 15.1% சதவீதத்தினருக்கு மட்டுமே காணப்பட்டது. நீண்டகாலமாக தொழில்நுட்ப சேவைகள் துறையானது தகவல் தொழில்நுட்பத் துறையின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது. செயற்கை மதிநுட்பம், தரவுப் பகுப்பாய்வு, உயர் தரத்திலான தொழில்நுட்ப சேவைகள் போன்ற தொழில்நுட்ப புதிதுகாண்டல்களை ஊக்குவிப்பதன் மீதான கவனம் குறைவாகவே உள்ளது. பொருளாதார புதிதுகாண்டல் அறிவின் மீதமைந்த வணிக தொழில்முயற்சிகளின்பால் திரும்புவது அவசியமானதாகும்.

→ **உகந்த வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களை இலங்கைக்குத் திருப்புவதை ஊக்குவிக்கும் செயற்பாட்டுத் திட்டமொன்றை முன்வைப்போம்.** தேசிய மற்றும் பிராந்திய முக்கியத்துவம்வாய்ந்த பிரச்சினைகளைச் சந்திப்பதற்கு இவ்வாறான தொழில்நுட்ப முதலீடுகளை ஈடுபடுத்திக்கொள்ளலாம்.

→ **டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் தனியார்துறை முதலீடுகளை நாம் முனைப்பாக ஊக்குவிப்போம்.** ரோபோ தொழில்நுட்பம், சைபர் இடைவெளி ஆய்வு, இலத்திரனியல் போன்ற வளர்ந்துவரும் கைத்தொழில்களுக்கு உதவுமுகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவோம். தனியார்துறையுடன் தொடர்புபடுவதற்கு கல்வி நிறுவனங்களை ஊக்குவித்து, உயர் தொழில்நுட்பத்தை அபிவிருத்திசெய்வதற்கு உதவியளிப்போம். புதிய கம்பனிகள்கு சந்தையில் பிரவேசிப்பதை அதிகரிப்பதற்கு பல்தொழில்நுட்பங்களை ஒன்றுகோர்த்தலும் உலகளாவிய புதிய கம்பனிகளின் வலையமைப்புடன் தொடர்புபடுத்துவதற்குமான வசதிகளை வழங்குவோம். தனியார்துறைக்கு டிஜிட்டல் எதிர்கால வேலைத்தளங்கள், வணிக மற்றும் கட்டுமான நடவடிக்கைகளை முற்கூட்டியே திட்டமிட்டுக்கொள்ள ஊக்குவிப்பளிப்போம்.

**தகவல் தொழில்நுட்பக் கைத்தொழிலில் தனியார்துறை முதலீடுகளை ஊக்குவிப்போம்.** தகவல் தொழில்நுட்பக் கைத்தொழிலில் வன்பொருள் கைத்தொழில்களுக்கு டிஜிட்டல் உதிரிப்பாகங்களின் உற்பத்தியையும் ஒருங்குசேர்த்தல் செயற்பாடுகளையும் முன்னெடுத்துச்செல்வதற்கு உதவியளிப்போம். சேவை வழங்குநர்களுக்கு தகுந்த முதலீட்டுச் சூழலொன்றை ஏற்படுத்துவோம். உயர் மென்பொருள் மற்றும் வன்பொருள் அபிவிருத்தியில் உயர் பயிற்சிப் பாடநெறிகளை முன்வைப்பதற்கு தனியார் கல்வி நிறுவனங்களை முனைப்பாக ஊக்குவிப்போம்.

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவை பாடசாலை பாடவிதானத்தில் உட்சேர்ப்போம்.** குறிப்பாக, கிராமப்புறங்களின் குறித்த பணிக்கு அவசியமான தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவோம். ஆரம்பமாக பாடசாலை பாடவிதானத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை உட்சேர்ப்பது திறன்கள் குறைந்த தொழிலாளர்கள் அல்லது முறைசாராத் துறையின் வேலையாளர்கள் என்ற வகையில் இளம் தலைமுறையினர் உழைப்புச் சந்தையில் சேர்வதற்கான உயர் வீதம் காரணமாக எழக்கூடிய திறன் இடைவெளியைக் குறைப்பதில் துணைவரும்.

**இலவச வை-பை வலயங்களை வழங்குவதற்கும் இணையவழி நுழைவு வசதிகளை விஸ்தரிப்பதற்கான வசதிகளை முன்னேற்றுவதற்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவோம்.** பிரஜைகளை வலுவூட்டும், தொடர்புகளை விருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் மேற்படி நடவடிக்கை எடுக்கப்படும். பொருளாதாரத்தில் டிஜிட்டல்மயமாக்க மட்டத்தை அதிகரிப்பதற்கு குறைந்த விலையில் இணைய வசதிகளை வழங்குவதற்கு அவசியமாதலால், சந்தையிலும் ஒழுங்குபடுத்தலிலும் நிலவும் தடைகளை அரசாங்கம் அகற்றும்.

**தேசிய டிஜிட்டல் அடையாள செயல்முனைப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.** அரச மற்றும் தனியார்துறை சேவை வழங்குநர்களின் பங்கேற்புடன் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களுக்கு உகந்த ஒரு சூழலுக்கான வழியைத் திறந்துவிடும் தனித்துவமான இலத்திரனியல் அடையாளத்துடன் கூடிய அடையாள அட்டையொன்றின் மூலம் டிஜிட்டல் தளம் ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த இலத்திரனியல் அடையாள அட்டையை டிஜிட்டல் ஆவணங்களில் கையொப்பமிடும்போதும் கொடுப்பனவு நடவடிக்கைகளின்போதும் பயன்படுத்தலாம். தேசிய டிஜிட்டல் அடையாள அட்டையில் சேகரிக்கப்பட்டுள்ள சுயவிபரத் தகவலகள் அரசாங்கத்தின் தரவு முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு வினைத்திறனை அதிகரித்து மிகவும் பாதுகாப்பான கொடுக்கல் வாங்கல்களுக்கு வழியமைக்கும்.

**அரசாங்கத்தின் செயற்பாடுகளின் டிஜிட்டல்மயமாக்கலை முன்னேற்றுவோம்.** பிரஜைகளுக்கு அவசியமான அடிப்படை மூல சேவைகளை வினைத்திறனான விதத்தில் வழங்குவதற்கு ஸ்மார்ட் கழகங்கள், இ-கிராம உத்தியோகத்தர் போன்ற பிரஜைகளின் இயல்திறன்களைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்போம்.

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மீதமைந்த சந்தைப்படுத்தல் இடைத்தொடர்பை (Markiting InterFaces) பலப்படுத்துவோம்.** குறிப்பாக. சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளும் அடங்கலாக உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு பாரிய உலக சந்தையில் பிரவேசிப்பதற்கு வழியமைத்து, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினூடாக சந்தைப்படுத்தல் இடைத்தொடர்புகளை அறிமுகப்படுத்துவோம். தகவல் சமச்சீரின்மைகளை குறைப்பதற்கும் விவசாய உற்பத்திகளின் உற்பத்திச் செலவுகளையும், போக்குவரத்து செலவுகளையும் குறைக்குமுகமாக விவசாயிகளை டிஜிட்டல் விவசாய தொழில்முயற்சிகளில் பிரவேசிக்கச்செய்யும் பொருட்டு செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக்கொண்ட சேவை ஊக்குவிப்பின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஊடாக பலப்படுத்தப்பட்ட, முன்னேறிய விவசாய சேவைகளை அரசாங்கம் ஊக்குவிக்கும்.

**அவசியமான மேற்பார்வையின் கீழ் பாவனையாளர்களுக்கிடையிலான பண கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்காக நடமாடும் கொடுப்பனவுமுறைகளின் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படும்.** இதன் மூலம் சிறிய அளவான தொழில்முயற்சிகளுக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும் ஏராளமான நிதியியற் சேவைகளை வழங்க எதிர்பார்க்கும் தொடர்புகளின் வளர்ச்சி விஸ்தரிப்பிற்கும் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் ஆற்றலை அதிகரிப்பதற்கும் வசதிகள் ஏற்படும்.

**பதிவு, ஒழுங்குபடுத்தல், பிரச்சினைகளுக்குத் தீர்வு என்பவற்றை மிகச் சிறப்பாக முகாமைசெய்யக்-கூடியவாறு இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம் பலப்படுத்தப்படும்.** புதிய தரத்திலான வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கு புதிதுகாண்டல் ஊக்குவிக்கப்படும் என்பதுடன், அவ்வாறான அணுகுமுறையொன்றுக்கு வினைத்திறனான, பயனுறுதிவாய்ந்த புலமைச் சொத்து முகாமைத்துவ முறையொன்று தேவைப்படும்.

**இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான சட்ட பணிச்சட்டகத்தைப் பலப்படுத்துவோம்.** இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் (திருத்தச்) சட்டத்தின் மூலம் இலங்கையின் இ-வணிக சட்டவாக்க பணிச்சட்டகமானது சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, சீனா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளின் மட்டத்திற்குக் கொண்டுவரப்படும். இணைய பாதுகாப்புப் பணிச்சட்டமும் மேலும் பலப்படுத்தப்படும்.

# 10. சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னல்கள்

பொருளாதார வளர்ச்சிக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பிற்கு நிகராக இலங்கையில் வாழும் மிகவும் நலிவடைந்த மக்களைப் பாதுகாக்கும் அர்ப்பணிப்பொன்றும் உள்ளது.

**வறுமைக்கும் துன்பத்திற்கும் உள்ளாகக்கூடிய மக்களுக்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குவதற்கு போதிய காப்பொன்று அல்லது வினைத்திறனான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் கிடையாது.** அரசாங்க ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் மாத்திரமே, ஓய்வூதியர்களுக்குப் போதிய ஓய்வூதியமொன்றை வழங்குகின்றது. 60 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் 20 சதவீதமானோருக்கு மாத்திரமே அதன் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 60 வயதுக்கு மேற்பட்ட ஏனைய மக்களுக்கு ஒன்றில் போதிய ஓய்வூதியம் கிடைப்பதில்லை. அன்றேல், ஓய்வுபெறும்போது ஒரே தடவையில் (ஓய்வூதியம் அல்லாத) ஒருதொகை கிடைக்கிறது. அன்றேல், எந்தவோர் ஓய்வூதியமும் கிடைப்பதில்லை. தேசிய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் (சமூர்த்தி) உரிய முறையில் இலக்கிடப்படவில்லை.

புதிய குடித்தன வருமானங்கள், செலவினங்கள் அளவையின்படி 2013 ஆம் ஆண்டில் 16 சதவீதமான குடும்பங்களுக்கு சமூர்த்தி நிவாரண உதவுதொகை கிடைத்திருந்த போதும் வீடுகளில் 5.3 சதவீதமான குடும்பங்கள் மட்டுமே வறியவர்கள் என வகைப்படுத்தப்பட்டிருந்தது. வயதுமுதிந்த சனத்தொகை இலங்கையின் சமூகப் பாதுகாப்புச் செலவை அதிகரிக்கின்றமையால், சமூகத்தில் இவ்வாறான பலவீனங்களைக் கவனிப்பதற்கும் பாதிக்கப்படக்கூடிய வறிய மக்களைக் காப்பதற்குமான திருத்தங்களும் மறுசீரமைப்புகளும் அவசியமாகின்றன.

→ **ஒன்றிணைந்த, பயனுறுதிவாய்ந்த சமூகப் பாதுகாப்பு முறைமையொன்று அரசாங்கத்தினால் நிறுவப்படும்.** இதன்மூலம் மேலதிக நிகழ்ச்சித்திட்டங்கள் குறைக்கப்படுவதுடன், ஒரே நபருக்கு மீண்டும் மீண்டும் உதவிகள் கிடைத்தல் குறைவடையும். அதே போல், நிர்வாகச் செலவுகளும் குறைவடையும். அரசாங்கத்தின் டிஜிட்டல் ஒருங்கிணைந்த முறைமையில், மையப்படுத்திய பயனாளிகளின் தரவுத்தளமொன்றின் பயன்பாட்டின் மூலம் தரப்படுத்தப்பட்ட செயன்முறை அறிமுகப்படுத்தப்படும்.

→ **எல்லா ஊழியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதிய நன்மைகள் கிடைக்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்படும்.** ஓய்வூதியத்திட்டங்களைக் கவனிப்பதற்கும் போதிய ஓய்வூதிய வருமானமொன்றை வழங்குவதற்கும் உரிய மறுசீரமைப்புகள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படும். யாவருக்கும் அடிப்படை பொருளாதாரப் பாதுகாப்பை வழங்கும் தேசிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்று எம்மால் விருத்தி செய்யப்படும்.

**அரசாங்கத்தினால் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கிடல் முன்னேற்றப்படும்.** இலக்கிடும் வழுக்களைக் கவனிக்கும் பொருட்டு நுழைவு மற்றும் வெளியேறும் பொறிமுறையொன்றுடன்கூடிய பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கான தெளிவான, தகுதியான அளவுகோல்கள் பொருள்வரையறை செய்யப்படும். வருமான உருவாக்குகை ஆற்றலை ஏற்படுத்தும் நுண்நிதி பாகங்களையும் ஜீவனோபாய அபிவிருத்தியையும் மீண்டும் வலியுறுத்தி அரசாங்கத்தினால் அதன் மூலக்கூறுகளிடையே சமநிலையொன்று விருத்திசெய்யப்படும். மேலும், டிஜிட்டல்மயமாக்கச் செயன்முறையானது வருமானங்களின் வினைத்திறனையும் வெளிப்படைத்தன்மையையும் கட்டியெழுப்பும்.

**மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில்வாய்ப்புகளையும் கல்வி மற்றும் அரசாங்க சேவைகளுக்கான அணுகுவழியையும் அதிகரிப்போம்.** மாற்றுத்திறனாளிகளுக்கு சுயாதீனமாகவும் தன்னம்பிக்கையுடனும் செயற்படக்கூடிய விதத்தில் அவசியமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் விருத்திசெய்யும். உதாரணமாக: கட்டிடங்களுக்கு சக்கர நாற்காலியின் உதவியுடன் பிரவேசிக்கும் ஆற்றல், நடைபாதையில் விழிப்புலனற்றோர் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய செங்கல் பரப்பு தரை, பொது இடங்களிலும் போக்குவரத்துச் சேவைகளிலும் செவிப்புல-கட்புல அறிவித்தல்கள் முதலியவற்றை அரசாங்கம் ஏற்படுத்தும். இலக்கிட்ட கல்வி கற்றல் செயற்முறைக்கு வசதிகள் வழங்கப்படும் என்பதுடன், பொருளாதார நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபடக்கூடிய ஆற்றல் ஏற்படுத்தப்படும்.

# 11. விவசாய மற்றும் நிலைபேறான அபிவிருத்தி

ஐக்கிய நாடுகள் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைவாக இன்றைய வளர்ச்சிக்கு வாய்ப்பளிக்கும் அதேவேளை, எதிர்கால சந்ததியினரின் சுபீட்சத்தை உறுதிசெய்வோம்.

**உணவுப் பாதுகாப்பின்மையைக் குறைப்பதற்கும் சேவை வசதிகள் குறைவான மாவட்டங்களை அபிவிருத்திசெய்வதன் மூலம் முழு வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் விவசாய மறுசீரமைப்புகள் அமுல்படுத்தப்படுகிறது.** காலநிலை மாற்றங்களை அடையாளம் கண்டு சூழற்பாதுகாப்பிற்கும் அனர்த்த முகாமைத்துவத்திற்கும் எரிசக்தி பேணுகைக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். இவை அனைத்தையும் செய்யும்பொருட்டு ஆட்சியில் அடிப்படை மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கையின் விவசாயத் துறையின் உற்பத்தித் திறன் குறைவால் உணவுப் பாதுகாப்பின்மையும் வறுமைநிலையும் ஏற்பட தூண்டுகோளாக அமைகின்றது. தரத்தை விருத்திசெய்த போதும், அரிசி அடங்கலாக உள்ளூரில் பயிரிப்படும் பயிர்கள் முக்கியத்துவமறற்ற நிலையில் காணப்படுகிறது. 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையின் 4.7 மில்லியன் சனத்தொகையானது குறைந்த போசாக்கு மட்டத்தில் காணப்பட்டது. குறையூட்டல் குறிப்பாக தோட்டத்துறை அடங்கலான பிராந்தியத்திலே கூடுதலாகக் காணப்படுகின்றன. இறக்குமதித் தீர்வை மற்றும் சுங்கத் தீர்வைகள் மீதான கொள்கைகள் தேவையின் நிமித்தம் மாறுபடுவதனால் உணவுப் பாதுகாப்பின்மையை மோசமடையச் செய்துள்ளது.

**அரசாங்கம் விவசாயத் துறையின் வினைத்திறனுக்கான வசதிகளை அளிக்கும்.** பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் விவசாய தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கும் பாரியளவான விவசாயத் தொழில்முயற்சிகளை நிறுவுவதற்கும் உற்பத்தித் திறன் கூடிய பயிர்களை அறிமுகப்படுத்துவதற்கும் நாம் வசதிகளை அளிப்போம். இங்கு பிரதான அணுகுமுறைகள் யாதெனில், தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம், விவசாய பாரிய வலயங்களை நிறுவுதல், பெறுமானச் சங்கிலிகளைப் பலப்படுத்துதல் என்பனவாகும்.

**தனியார் துறையின் பங்களிப்பு சாத்தியமுள்ள இடங்களில் அரச தனியார் பங்காண்மை முயற்சிகளும் அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்படும்.** விவசாயத் துறையை நவீனமயப்படுத்துவதற்கு தனியார்துறை ஊக்குவிக்கப்படும். வர்த்தகர்-விவசாயிகள் ஒப்பந்தங்கள், ஒப்பந்த பயிரிடல் முறைகள், விவசாய பாரிய வலயங்கள் போன்ற மாதிரிகளின் ஊடாக வினைத்திறனானதும் நிலையான பெறுமானச் சங்கிலிகளை அறிமுகப்படுத்துவதற்கும் அவர்கள் ஊக்குவிக்கப்படுவர். களஞ்சியத்திடலும் போக்குவரத்தும், தகவல் சமச்சீரின்மைகளை ஒழிப்பதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தையும் பயனுறுதிவாய்ந்த விதத்தில் உரிய காலத்தில் கண்காணிப்பதற்கும் காலத்திற்கேற்ற நவீன தீர்வுகளை வழங்கும் அரசாங்க தனியார் பங்காண்மை முயற்சியொன்றின் ஊடாக விவசாய பண்டங்கள் முதலான சேவை வலையமைப்பொன்றை நாம் அறிமுகப்படுத்துவோம்.

**உத்தேச விவசாயத் துறையின் நவீனமயப்படுத்தும் கருத்திட்டத்தை துரிதப்படுத்துவோம்.** விவசாய வியாபாரத்துறையிலும் பெறுமானச் சங்கிலிகளிலும் முதலீடுசெய்யும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவான விவசாய வியாபார முயற்சிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுக் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்துவோம். இதன்மூலம் தனியார் துறைக்கும் சிறிய அளவான உற்பத்தியாளர்களுக்கும் இடையில் பங்காண்மை ஊக்குவிக்கப்படும். அதேபோல், விளைவுப்பெருக்கத்தைப் பலப்படுத்துவதற்கும் பல்வகையாக்கத்தையும் தாங்கிக்கொள்ளும் ஆற்றலையும் பலப்படுத்துவதற்கான நவீன தொழில்நுட்பத்தின் அறிமுகமும் தொழில் நுட்பத்தை ஈடுபடுத்திக்கொள்வதும் ஊக்குவிக்கப்படும்.

**அரசாங்கம் பெருந்தோட்டத் துறையின் நவீனமயப்படுத்தலுக்கு ஊக்கமளிக்கும்.** தோட்டப்புற மக்களுக்கு கௌரவமான வாழ்நிலையொன்றை உறுதிசெய்வதுடன் தோட்டத் துறையை சர்வதேச போட்டித்தன்மையுள்ளதாக மாற்றுவதற்கு உந்துதலொன்றை வழங்குவோம். புதிய தனிச்சிறப்பான சந்தைகளைத் தேடிப் பிடிப்பதற்கும் தேயிலை மீள் ஏற்றுமதிக்கான பெறுமானங்களைச் சேர்ப்பதை ஊக்குவிக்கப்படும். இறப்பர் கைத்தொழிலுக்கும் தெங்கு மற்றும் சீனி உற்பத்திக்குமான தனியார் தொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப்படும்.

**அரசாங்கம் தேயிலை, இறப்பர், தெங்கு, மரபுரீதியற்ற ஏற்றுமதித் துறையில் சிறு தோட்டத்துறையினருக்கு உதவுதல்.** உற்பத்தி மற்றும் பதனிடல் செயன்முறையை விருத்திசெய்துகொள்வதற்கும் உலக சந்தை வாய்ப்புகளிலிருந்து அனுகூலமடைவதற்கு தமது உற்பத்திகளை வடிவமைத்துக்கொள்வதற்கும் நாம் உதவுவோம். உலகளாவிய ரீதியில் திடீர் விலை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களில் குறுகிய கால நிவாரணமொன்றைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் செயலாற்றும்.

**கால்நடை வளர்ப்புத் துறையில் முதலீடுகள் ஊக்குவிக்கப்படும்.** பாலுணவு உற்பத்தியின் பெறுமானங்களைச் சேர்ப்பதற்கும் அபிவிருத்திக்கும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் கடன் வசதி செய்துகொடுக்கப்படும். கோழி வளர்ப்புக் கைத்தொழிலுக்கும் அரசாங்கத்தினால் உதவி அளிக்கப்படும்.

**அரசாங்கம் கடற்றொழில் துறையில் முதலீடுகளை ஊக்குவிக்கும்.** பேண்தகு கடற்றொழிலுக்காக மீனின் தரத்தையும் விளைவுப்பெருக்கத்தையும் முன்னேற்றுவதற்கு கடற்றொழில் முறைக்கும் உவர்நீர் மீன்பிடித்தொழிலில் மீனுற்பத்தி இருப்பை மதிப்பீடுசெய்வதற்குமான தேசிய கொள்கையொன்றை விருத்தி செய்வோம். துறைமுக தொழில்முயற்சியின் அபிவிருத்திக்கும், மீன் உற்பத்தியின் அபிவிருந்திக்கும் கடற்றொழில் பாரிய வலயங்களை நிறுவுவதற்கும் தனியார் துறை ஊக்குவிக்கப்படும். இத்துறையின்பால் முதலீடுகளை கவர்வதற்கு ஆழ்கடல் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு விதிக்கப்பட்டுள்ள 40% சதவீத வெளிநாட்டு முதலீட்டு எல்லை அரசாங்கத்தினால் தளர்த்தப்படும்.

**போட்டிநிலையை அதிகரிக்கும் பொருட்டு அரசாங்கம் சிறு விவசாய தொழில்முயற்சி பங்காண்மைக் கருத்திட்டங்களை அரசாங்கம் ஊக்குவிக்கும்.** இக்கருத்திட்டங்கள், விவசாய தொழில்முயற்சிகளின் அரசாங்க தனியார் உற்பத்திப் பங்காண்மையை உறுதிப்பத்தி விஸ்தரிக்கும். அதன்மூலம் முழு கிராமிய நிதியியற் சேவை வழங்கலும் கூட்டு நிதியீட்ட மற்றும் ஆபத்தைப் பகிர்ந்துகொள்ளலும் இடம்பெறும். அதன்மூலம் சிறு அளவிலான விவசாய தொழில்முயற்சிப் பங்காண்மையினராக பலமடையும். சிறு அளவான உற்பத்தியாளர்களுக்கும் நவீன பெறுமானச் சங்கிலி செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான தொடர்புகளுக்கு நாம் வசதிகளை அளிப்போம்.

**நாம் போசாக்கான பயிரிடல் பழக்கங்களை ஊக்குவிப்போம். உணவுகளின் பண்புத்தரமும் அனுமதிபெற்ற உர மட்டங்களும் குறித்த தேசிய மட்டத்திலான கொள்கைசார் நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவோம்.** இதன்மூலம் சேதன உற்பத்திகளை போதுமான அளவில் சந்தைக்கு வருவது உறுதிப்படுத்தப்படும்.

**பூகோள மற்றும் மக்கள் குழுவினர் மத்தியில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாக, மாறுபட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களை காணமுடிகின்றது.** வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், மொனராகலை மாவட்டத்திலும், தோட்டப்புறப் பகுதிகளிலும் வறுமை உச்சநிலையில் காணப்படுகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தியில் வடமாகாணம் மிகக்குறைந்தளவான பங்களிப்பைச் செய்துள்ளது. ஊவா மாகாணத்தில் 21 வீத குடும்பங்கள் தேசிய வறுமைக்கோட்டிற்கு கீழே காணப்படுகின்றன. 40 சதவீத வறுமை தோட்டப்புறங்களில் காணப்படுகின்றது. அதில் வறுமையான தோட்டப்புற குடும்பங்கள் மிகவும் வறுமை நிலையில் காணப்படுகின்றன. பாரம்பரிய விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடல், உட்கட்டமைப்பு மற்றும் சந்தைப்படுத்தலில் குறைபாடுகள் காரணமாக சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் குறைந்தளவான பரம்பல் கிராமப்பிரதேசங்களின் வறுமைநிலை அதிகரிப்பிற்கு காரணமாக அமைந்துள்ளது. எனவே இலங்கையினுள் நீண்டகால அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள வறுமைப் பிரதேசங்கள் ஒரு தடையல்ல என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அபிவிருத்திக்கான சமநிலை வழிமுறையொன்றைக் கைக்கொள்வோம்.

**அரசாங்கம் புதிய அபிவிருத்தி வங்கியொன்றை உருவாக்கும்** - இது சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறைகளை இலக்காகக் கொண்டு தற்போதைக்கு நடைமுறையில் உள்ள நிதிநிறுவனங்களைப் பயன்படுத்தி, இப்பிரதேசங்களுக்கு நிதிவளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான நீண்டகால அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு ஒத்தாசை புரியவும், நிதிவளத்துக்கான பங்களிப்பை வழங்கவும் இந்த வங்கி செயற்படும்.

**பிரதான அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படும்** - இதற்காக ருஹுணை அபிவிருத்தி வலயம், திருகோணமலை பொருளாதார அபிவிருத்தி வலயம், வயம்ப விசேட பொருளாதார அபிவிருத்தி வலயம் (எரன்வில சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டம், கல்பிட்டிய சுற்றுலா அபிவிருத்தி வலயம், பிங்கிரிய வலயம்,குளியாப்பிட்டிய வலயம்) மற்றும் ரஜரட்டை அபிவிருத்தி வலயம், (மொரகஹகந்தை செயற்திட்டம், மல்வத்து ஓயா செயற்திட்டம், பொலன்னறுவையின் புத்தெழுச்சி) போன்ற செயற்திட்டங்கள் இதனுள் உள்ளடங்கும்.

**வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்காக அரசாங்கம் புரிந்துணர்வு மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுக்கும்** - இதன்போது அடையாளம் காணப்பட்டுள்ள முக்கிய பிரச்சினைகளாவன அ) மீள்குடியேற்றம் தொடர்பிலான அடிப்படை சமூக வாழ்வாதார தேவைப்பாடுகளை வழங்கல் ஆ) பாதிப்புக்குள்ளான உட்கட்டமைப்பு வசதிகளை மீண்டும் பெற்றுக் கொடுத்தல் இ) கிராமிய மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான குடிநீர் வசதிகளை ஏற்படுத்தல்.

- இதற்காக பயனாளிகளுக்கான வீடமைப்புத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். அதற்கு மேலதிகமாக அனைத்து வசதிகளும் கொண்ட 65 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்.
- மீள்குடியேறிய மக்களுக்காக சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை பெற்றுக் கொடுக்க முன்னுரிமை அளிக்கப்படும்.
- அரசாங்கம் குறித்த பிரதேசங்களில் தொழில்வாய்ப்புகள் மற்றும் தொழில் செய்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளும். அதற்கான பயிற்சிகள் , கடன் மற்றும் சந்தைவாய்ப்புக்கான வழிகாட்டல் என்பவற்றையும் வழங்க வேண்டியுள்ளது. வடக்கு மக்களின் பிரதான ஜீவனோபாயமான விவசாயம், மீன்பிடித் தொழில், கால்நடை வளர்ப்பு போன்றவற்றுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அப்பிரதேசத்தில் புதிய மீன்பிடித் துறைமுகங்களை ஏற்படுத்தவும், நடைமுறையில் உள்ள மீன்பிடித்துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கு அதிகரிக்கப்பட்ட ஊக்குவிப்புகள், சலுகைகள் மற்றும் வரிவிலக்கும் புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.
- காணாமல் போனோருக்கான செயலகம் ஊடாக காணாமல் போனவர்களைக் கொண்டுள்ள குடும்பங்களுக்கு "காணாமல் போனவர்கள்" சான்றிதழ் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நலனோம்புகை செயற்திட்டங்கள், காணி மற்றும் சொத்துக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கல்களுக்கு நிவாரணங்கள் கிட்டும்.

**அரசாங்கம் ஊவா மாகாணத்தின் அபிவிருத்தி செயற்திட்டத்தை முன்னெடுத்தலும், நடைமுறைப்படுத்தலும்** - அரசாங்கம் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி தொடர்பில் முன்னுரிமையளித்துச்செயற்படுகின்றது. அதற்கேற்ப பாலங்களை நிர்மாணித்தல் மற்றும் நகர அபிவிருத்தி, சிறு மற்றும் நடுத்தர ரீதியிலான நீர்ப்பாசன மற்றும் குடிநீர் வசதிகள், மொனராகலை மாவட்டத்தில் துரித நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்திட்டம் (வெல்லஸ்ஸ நவோதய), ரிதீமாலியத்த ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டம் மற்றும் தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை மீண்டும் அத்தொழில்துறைகளில் ஈடுபட ஊக்குவித்தல் என்பன இதன்கீழ் மேற்கொள்ளப்படும்.அதற்கு மேலதிகமாக நிதி நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

**அரசாங்கம் வலய ரீதியான தொழில்நுட்ப கேந்திரங்களை நிர்மாணிக்கும்** - அதன் மூலமாக சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களைக் கையாளும் வாய்ப்புக் கிடைக்கும். அதன் மூலமாக சந்தை வாய்ப்புள்ள உற்பத்திகளை இனம் காணவும், சந்தை வாய்ப்புகளை திட்டமிடவும், இணையத்தின் ஊடாக வர்த்தகம் மேற்கொள்ளவும் அரசாங்கம் ஒத்தாசை செய்யும்.

**அரசாங்கம் நிதி உள்ளீடுகளுக்கான வழிமுறைகளை செயற்படுத்தும்** - நிதி மற்றும் நிதிசார் செயற்திட்டங்களுக்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுப்பது கிராமிய அபிவிருத்திக்கு இன்றியமையாத விடயமாகும். குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் அபிவிருத்திக்கு இது முக்கியமானதாகும். நம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் பரம்பலை அதிகரிப்பதற்கு இலகு கடன்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். அரசாங்கம் பங்காளர் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சிறுமற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்த கடன் பாதுகாப்பு செயற்திட்டம் ஒன்றையும் முன்னெடுக்க உத்தேசித்துள்ளது.

**இலங்கையின் பலவீனமான சூழல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் இயற்கை அனர்த்தங்களினால் இலங்கைக்கு கூடிய பாதிப்புகளை ஏற்படுத்தும்** - வரட்சி, வெள்ளம் மற்றும் மண்சரிவு அடிக்கடி ஏற்படுவதானது பாரிய மனிதவள மற்றும் நிதி நெருக்கடிகளை ஏற்படுத்தும். தொழிற்துறை செயற்பாடுகளின் வளர்ச்சி மற்றும் நகரமயப்படுத்தலுடன் நாட்டின் சுற்றாடல் மாசடைவதும் அதிகரித்துள்ளது. போதியளவில் செயற்படாத கழிவு மற்றும் நீர்முகாமைத்துவ செயற்பாடுகள், செயற்திறனற்ற கட்டளைகள், கண்காணிப்பதற்கான ஆற்றல்மிகு கட்டமைப்புகள் தொழிற்படாமை போன்றன நிலைபேறான அபிவிருத்திக்குத் தடையான விடயங்களாக காணப்படுகின்றன.

**அரசாங்கம் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை மேம்படுத்தும்** - இலங்கையின் அனைத்து இல்லங்களையும் இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பதற்கான காப்பீட்டுத் திட்டமொன்றை அரசாங்கம் தேசிய காப்புறுதி பொறுப்புச் சபை ஊடாக மேற்கொண்டு வருகின்றது அதன் மூலம் அனர்த்தங்களுக்குள்ளானவர்கள் அரசாங்கத்துக்கு சுமையாகாத வகையில் தங்களின் இழப்புகளுக்கான இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளலாம். அனர்த்தங்களின் பின்னர் மீண்டும் அப்பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்காக தேசிய அனர்த்தப் பாதுகாப்பு நிதியம் உருவாக்கப்படும். மண்சரிவிற்கு உள்ளான பிரதேசங்களில் வாழ்கின்ற பிரஜைகளை மீள குடியமர்த்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அனர்த்தங்களுக்கு உள்ளாகும் நிலைமை கருத்திற்கொள்ளப்பட்டு அப்பிரதேச மக்களுக்கு பொருளாதார ரீதியாக முக்கியத்துவமிக்க காப்புறுதித் திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

**வளிமாசடைதலற்ற பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கும் வகையில் பசுமை செயற்திட்டங்களை அரசாங்கம் அனுமதிக்கும்.** சமுத்திரம் மற்றும் கரையோர வளங்களை நிலைபேறான முறையில் பயன்படுத்துவதுடன், இயற்கைப் பசளைப் பயிர்ச்செய்கை மற்றும் புத்தாக்க சக்தி மின்பாவனை என்பன ஊக்குவிக்கப்படும். இத்துறைகள் சார்ந்த ஆய்வுகளும் ஊக்குவிக்கப்படும். உணவு உற்பத்திகளுக்கு பசுமை தொழில்நுட்ப செயற்றிட்டங்களை விருத்தி செய்வது அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**சூழலுக்கு உகந்த போக்குவரத்து கட்டமைப்பு மேம்படுத்தப்படும்** - மேம்படுத்தப்பட்ட பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பு ஒன்றுடன் வீதிப் பாதுகாப்பையும் அதிகரிப்பதன் ஊடாக தனிப்பட்ட வாகனப் பயன்பாட்டினை குறைக்கலாம். அதன் மூலம் எரிபொருள் சிக்கனத்தையும் நடைமுறைப்படுத்தலாம்.

**பசுமை நிதி வழிமுறைகளையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தும்** - இதன் மூலம் வங்கி மற்றும் ஏனைய நிதிநிறுவனங்கள் பசுமை செயற்திட்டங்களில் முதலீடு செய்வது ஊக்குவிக்கப்படும். அதன் மூலம் பொருளாதார வளர்ச்சி சூழலுக்கு ஏற்ற விதத்தில் இயைபாக்கப்படும்.

**பிரஜைகளுக்கு கழிவு முகாமைத்துவம் பயிற்றுவிக்கப்படும்** - கழிவு முகாமைத்துவம் இலங்கையின் பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது. தற்போது அரசாங்கம் அதற்கான நிலையான தீர்வொன்றைக் காணும் வழிமுறைக்குள் பிரவேசித்துள்ளது. வரி ஊக்குவிப்பு மூலமாக கழிவுகளை மட்டுப்படுத்தவும், மீள்சுழற்சி செய்வதற்கும், மீள்பயன்பாட்டிற்கும் தனிநபர் மற்றும் நிறுவனங்களை ஊக்குவிப்போம். வீடுகளில் குப்பைகளை பிரித்து அகற்றல் அல்லது எரிபொருளுக்காக பயன்படுத்தல் போன்றன ஊக்குவிக்கப்படும்.

**கழிவுகள் மூலம் மின்னுற்பத்திக்கான நடவடிக்கை** - முறையற்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட கழிவகற்றல் நடவடிக்கைகளின் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்வதற்காக அரசாங்கம் தனியார் துறையினருடன் இணைந்து சர்வதேச வழிமுறைகளுக்கு அமைவாக கழிவகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளும்.

**ஒருதடவை மட்டும் பயன்படுத்தப்படும் பொலித்தீன் வகைகளின் பயன்பாட்டைக் குறைக்க நடவடிக்கை** - அரசாங்கத்தின் மூலம் பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக்போத்தல்கள் மற்றும் பொருட்களுக்கு வரியொன்று விதிக்கப்படும். அதன் மூலம் கிடைக்கும் வருமானம் கழிவுகளைக் கொண்டு மின்னுற்பத்தி செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

**சக்தி வளங்கள் தொடர்பாக அதிக நிதியினை செலவிடுவது கடந்த கால விருத்திக்கு கட்டுப்பாடாக அமைந்துள்ளது.** பாரிய நகர அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் வலயங்கள் மற்றும் பிற வலய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை திட்டமிட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மூலம் சக்தி வளக் கேள்வியினை நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் மேலும் அதிகரித்துள்ளது. விசேடமாக மின்சக்தி கேள்வி அதிகரித்துள்ளது. படிம எரிபொருட்களை அதிகளவில் வழங்குவது, எமது ஏற்றுமதிகளில் தங்கியிருப்பதை அதிகரிப்பதுடன் சூழலுக்கும் பாதிப்பினை ஏற்படுத்தி நீண்ட கால நிலைபேறான அபிவிருத்திக்கான எமது எதிர்பார்ப்புகளுக்கும் தடையினை ஏற்படுத்துகின்றது.

**நீண்டகால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டங்களை செயற்படுத்தி அரசாங்கம் முழு மின்சக்தி உற்பத்திக்கான பிரவேசத்தையும் களஞ்சியப்படுத்தலையும் அதிகரித்துள்ளது.** வீட்டு, வணிக மற்றும் கைத்தொழில் பிரிவுகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற அதிகரிக்கின்ற மின்சார கேள்வியினை பூர்த்தி செய்வதற்காக எம்மால் நீண்ட கால மின்பிறப்பாக்கல் திட்டம் (2018 முதல் 2034 வரை) செயற்படுத்தப்படுகின்றது. தற்போது திட்டமிடப்பட்ட வர்த்தக வலயங்களில் இவ்வேலைத்திட்டத்தினை பிரபல்யப்படுத்தப்படுவதுடன் மின்சக்தியினை பூர்த்தி செய்வதற்காக எதிர்பார்க்கின்ற உயரிய கேள்வியினை பூர்த்தி செய்வதும் இதன்போது கவனத்திற் கொள்ளப்படும்.

**நிலைபேறான மின்சக்தி உற்பத்தியையும் களஞ்சியப்படுத்தலையும் ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.** அரசாங்கம் சம்பிரதாயமற்ற மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி தொழில்நுட்பத்தை ஊக்கப்படுத்துகின்றது. நீர்மின்சக்தி, காற்று மின்சக்தி மற்றும் சூரிய மின்சக்தி ஆகிய வேலைத்திட்டங்களை குறிப்பிடலாம். தேசிய வலயமைப்புடன் தொடர்பான உபாய முறையொன்றாக கூரைகளின் மீது சூரிய சக்தி பிரிவினை பொருத்துவதை விருத்தி செய்வோம். மின்சக்தி மற்றும் மீள புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற 'சூரிய பல சங்கிரமய' எனும் திட்டத்தின் மூலம் 2020ம் ஆண்டளவில் தேசிய வலயமைப்பிற்கு 200 மெகா வொட் சூரிய சக்தி மின்சாரத்தினை இணைத்துக் கொள்வதையும், 2025ம் ஆண்டளவில் 100 மெகா வொட் சக்தியினை இணைத்துக் கொள்வதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

**அரசாங்கத்தின் மூலம் மின்சக்தி துறைக்கு விலைச்சுட்டி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.** மின்சக்தி வழங்கல் மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகளுக்காக சூத்திரம் ஒன்றினை அடிப்படையாகக் கொண்ட விலையை நிர்ணயிப்பதன் மூலம் சக்திக்கான சர்வதேச விலை மாற்றங்களின் தாக்கத்தைக் குறைக்க முடியும். சர்வதேச விலைகளில் ஏற்படும் மாற்றங்களை வெளிப்படைத் தன்மையுடன் உள்ளூர் பாவனையார்களிடம் கொண்டுசெல்லக் கூடிய விலை நர்ணய முறைமை ஒன்று ஏற்படுத்தப்படும். அனைத்து நிவாரணங்களையும் சரியாக இனங்கண்டு முறையாக வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

**அரசாங்கத்தின் மூலம் கேள்வி முகாமைத்துவத்துக்கு மற்றும் திறன்விருத்திக்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.** விசேடமாக மோட்டார் வாகனங்களில் மின்குமிழ்கள் மற்றும் மின்னியல் உபகரணங்கள் உட்பட சக்தி வள விரயத்துடன் கூடிய இறக்குமதிகளுக்காக ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுக்கின்றோம். சக்தி வளங்களின் சிக்கனமான பாவனைக்காக சக்தி வளங்களின் நட்சத்திர தரப்படுத்தல் முறையொன்றை ஊக்குவிக்கின்றோம். சக்தி வளங்களின் சிக்கன தன்மைக்காக ஸ்மார்ட் மீட்டரினை கட்டாயப்படுத்துவோம். அதேபோன்று பசுமையான நிர்மாணிப்புகள் மற்றும் சுத்தமான தயாரிப்பு செயன்முறை போன்ற சக்திவள செயற்றிறன் தொழில்துறை செயன்முறைகளை ஊக்கப்படுத்துகின்றோம்.

**அரசாங்கத்தின் மூலம் (Downstream) பெற்றோலிய தொழில்துறை அபிவிருத்தி செய்யப்படுகின்றது.** பெற்றோலிய உற்பத்திகள் இறக்குமதி, ஏற்றுமதி, பகிர்ந்தளித்தல் மற்றும் விநியோகித்தல் நிர்ணயங்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்து வருகின்றோம். அதேபோன்று பெற்றோலிய வளங்கள் ஆராய்ச்சி மற்றும் (Upstream) பெற்றோலியம் தொழில்துறை அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். வலய நாடுகளின் பெற்றோலிய துறையில் இலங்கையின் பங்களிப்புக்காக திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் அபிவிருத்திக்கும் மிகவும் முக்கிய பணியொன்றை நிறைவேற்றுகின்றது.

# 12. நிர்வாகமும் பொறுப்பும்

**மோசமான நிர்வாகம் மற்றும் நிர்வாக இயந்திரம் இலங்கையில் நீண்ட கால விருத்தியினை கட்டுப்படுத்துவதற்கு காரணமாய் அமைகின்றது.** சட்டவாட்சியில் உள்ள பலவீனம், மோசடிகள் தொடர்பில் புரிந்துணர்வு மற்றும் ஜனநாயக சுதந்திரமானது நாட்டில் காணப்படுகின்ற அரச தரம் தொடர்பான சுட்டிக்கு நேர்முகமான தாக்கம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான பலவீனங்கள் மூலம் சாதாரணமாக கொள்கை தொடர்பில் ஊகங்களை வெளியிடுவதற்கு முடியாது. என்றும், பொது சேவையினை பகிர்ந்தளிப்பில் காணப்படுகின்ற பலவீனங்கள் மற்றும் தேசிய, சர்வதேச தனியார் முதலீட்டு தடைகளை ஏற்படுத்துகின்ற நிர்வாக ரீதியான சிவப்பு பட்டிச் சட்டமானது புறக்கணிக்கப்படுகின்றது.

**நல்லாட்சியின் கொள்கைகளை நாம் பலப்படுத்துவோம்** - பரந்த மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலானது அரசியல் யாப்பு மறுசீரமைப்பினை முழுமைப்படுத்தல், பொருளாதார கொள்கையினை மாற்றுதல், நிர்வாகத்தை விருத்தி செய்தல் மற்றும் இடைநிலை நீதியினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றோம். அதேபோன்று பொதுச்சேவையில் காணப்படுகின்ற மோசடிகள், பொறுப்பற்ற தன்மை, நடுநிலையற்ற தன்மை மற்றும் செயற்றிறன் அற்ற தன்மைக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நாங்கள் இணங்கி இருக்கின்றோம்.

**சகல பிரஜைகளினதும் உரிமைகளை உறுதி செய்து அனைவருக்கும் இலங்கையர் என்று உணரும் அடிப்படையில் தற்போது காணப்படுகின்ற நல்லிணக்கம் தொடர்பான வேலைத்திட்டங்களை பலப்படுத்துகின்றோம்** - இம்முன்னெடுப்புக்கு பிரஜைகளின் பொருளாதார விருத்தி மற்றும் முன்னேற்றுவதற்காக அனைவருக்கும் சமமான அவகாசங்களை ஏற்படுத்திக் கொடுப்பது உள்ளடங்குகின்றது.

**பொது மக்களின் தகவல் அறியும் உரிமையினை கட்டியெழுப்புவதற்கு மற்றும் பலப்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது** - புதிதாக நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் அரசாங்கம் பொது மக்களுக்கு பொறுப்புடையது என்று உருவாக்கப்பட்டுள்ளது. அதே போன்று தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பொதுமக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்கின்றது. ஜனநாயகத்தின் உயர்ச்சிக்கு முக்கியத்துவமான அறிவார்ந்த வாத விவாதங்களை உருவாக்கின்றது. கீழ் மட்டத்தில் இருந்து ஜனநாயகம் மற்றும் செயற்பாடுகளை பலப்படுத்துவதன் மூலமும் விவாதங்கள் மற்றும் பிரயோகிக்கின்ற தகவல்களின் தரத்தினை விருத்தி செய்வதன் மூலமும் அது அரச நடவடிக்கைகளில் பொதுமக்களின் பங்குபற்றலினை பலப்படுத்துகின்றது. அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் நாங்கள் தகவல் அறியும் உரிமையினை மதிக்கின்றோம், அதனை உறுதி செய்கின்றோம்.

**நாங்கள் கிராமிய இராஜ்யத்தை செயற்படுத்துகின்றோம்** - கிராமிய இராஜ்யம் எனும் அரச நிறுவாகத்துக்கு மற்றும் அபிவிருத்திக்கு பொதுமக்களின் பங்குபற்றலின் குறையினை நிரப்புவதற்காக எம்மால் கொண்டுவரப்பட்ட யோசனையாகும். கிராமிய இராஜ்யத்தின் மூலம் கிராமிய பிரஜைகள் அவர்களின் அபிவிருத்தி செயற்பாட்டில் பங்காளர்களாக நியமிக்கப்படுகின்றனர். அதேபோன்று கிராமிய வேலைத்திட்டங்கள் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படுகின்றது. கிராமிய அரசின் பிரதான நோக்கம் பிரதேசத்தில் சமூக பொருளாதார மற்றம் கலாச்சார அபிவிருத்தி, சமூகத்தின் உறுதித்தன்மை, சமூக பொருளாதார பிரிவின் பொது உரிமையாண்மை மற்றும் பிரதேச அபிவிருத்தி மற்றும் தேசிய அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பொருந்துதலுடன் என்பவற்றுடன் பொருந்துதலாகும். நாட்டின் பாரிய முழு பொருளாதார அடிப்படையினுள் உள்ளூராட்சி நடவடிக்கைகளில் பொதுமக்களின் பங்குபற்றலின் அவகாசம் கிராமிய இராஜ்யத்தின் மூலம் கிடைக்கின்றது.

- **கிராமிய இராஜ்யத்தை செயற்படுத்துவதற்காக இலங்கையினுள் 2500 பிரிவுகள் உருவாக்க உள்ளோம்** - இப்பிரிவுகளை உருவாக்கும் போது பொருளாதாரத்தினை ஒருநிலைப்படுத்தல் மற்றும் சாத்தியவளம், சமூக ஒருமைப்பாடு, பூகோள அமைவு ஆகிய அம்சங்களை கவனத்திற் கொள்ளப்படும். அதன் மூலம் எதிர்பார்ப்பது பிரஜைகளினால் இந்நடவடிக்கைகளை செயற்படுத்தும் முறைமையொன்றினை உருவாக்குவதாகும்.
- **கிராமிய இராஜ்யத்தை மேற்பார்வையிடுவதற்கும், நிர்ணயிப்பதற்கும், இலகுபடுத்துவதற்கும், அதற்கு ஒத்துழைப்பதற்கும் நாங்கள் தேசிய கிராமிய இராஜ்ய ஆணைக்குழு மற்றும் வலய கிராமிய இராஜ்ய குழுவினையும் உருவாக்குதல்** - கிராமிய இராஜ்யமானது பிரதேசத்தில் பொது பிரிதிநிதிகள் சபையானது உருவாக்கப்படுவது, 03 வருட காலத்துக்கும் மேலாக உரிய பிரதேசத்தில் செயற்பாடுகளில் ஈடுபட்ட தேசிய கிராமிய இராஜ்ய ஆணைக்குழுவினை ஏற்றுக் கொள்ள முடிந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இன்னும் சிலராவர்.

# 13. ஒருங்கிணைப்பினை பலப்படுத்துதல் மற்றும் செயற்படுவதை பரிசீலித்தல்

பயனுள்ள செயற்படுத்தலின்றி கொள்கை மற்றும் வேலைத்திட்டங்கள் மூலம் அர்த்தமொன்று இல்லை என்பதை நாம் இனங்கண்டுள்ளோம். அதற்கு பலமான மேற்பார்வையும் ஒருங்கிணைப்பும் அவசியமாகின்றது. தனியார் துறைக்கு முறையாக செயற்படுவதற்கான சூழலை உருவாக்குவதுடன் பொருளாதாரத்தில் பலன் மற்றும் செயற்றினை உயர்த்துவதற்கு வேண்டுமெனில் அரசாங்கம் மற்றும் தனியார் துறை ஆகியவற்றை மிகவும் நெருக்கமாக ஒருங்கிணைப்பு செய்ய வேண்டும். அரச வளங்களில் மட்டுமட்டான தன்மையானது எதிர்காலத்தில் இது தொடர்பில் விசேடமாக முக்கியத்துவம் அடைகின்றது.

**நாங்கள் தொடர்ச்சியான மற்றும் எதிர்வு கூறக்கூடிய பொருளாதார கொள்கை வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த உள்ளோம்** - இது வியாபார பிரஜைகளின் நம்பிக்கையின்மையினை குறைக்கும் தொடர்ச்சியான வேலைத்திட்டமாகும். அதேபோன்று அது தேசிய அபிவிருத்தி செயற்றிட்டத்துக்கு அமைவாக காணப்படுகின்றது. அரசாங்கத்தின் உயர் மட்டத்தினால் மேற்பார்வை செய்யப்படுவதாகும்.

**மேற்பார்வை மற்றும் மதிப்பிடுகளில் தகைமை மட்டத்தினை மற்றும் வேலைத்திட்டத்தினை பலப்படுத்தல்** - அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் வேலைத்திட்டங்களில் செயற்றிறனை மேற்பார்வை செய்யப்படுவது, அரச துறைகளின் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் (அரச மற்றும் தனியார் இணைப்பு உட்பட) தனியார் துறையின் முதலீட்டு மற்றும் முழு பொருளாதார சட்டகத்தின் முழு பயன்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துவதன் ஊடாக.

**ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நாங்கள் டிஜிட்டல்மயப்படுத்தலை பயன்படுத்த உள்ளோம்** - வேலைத்திட்ட தகவல்களை சேகரிப்பதும் அவற்றை கொள்கை வகுப்பாளர்களுக்கு, முதலீட்டாளர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு பெற்றுக் கொள்வதற்கும், புரிந்துணர்வுள்ள கேந்திர தரவு களஞ்சியசாலை ஒன்றை முன்னெடுத்துச் செல்லப்படும். இம்முன்னெடுப்பினை இலகுபடுத்துவதற்காக முழு அரச பிரிவினையும் டிஜிட்டல் மயப்படுத்தப்படும்.


# 14. முடிவுரை

**இலங்கையர் அனைவருக்கும் நன்மைகள் தரும் சுபீட்சமான பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புவது எமது நோக்கமாகும்.** இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக நாம் சந்தைப் பொருளாதார அடிப்படைகளை பின்பற்றவுள்ளதுடன், அதன்போது புதிய உற்பத்திகள் மற்றும் தொழில்முயற்சிகள் என்பவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் புதிய பூகோளரீதியான பின்னணியில் உற்பத்தித்திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்துக் கொள்வத்றகு தேவையான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்படும். தனியார்துறை முதலீடுகள் மற்றும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட அபிவிருத்திக் கட்டமைப்பொன்றை உருவாக்கி இந்து மா சமுத்திரப் பிராந்தியத்தில் பொருட்கள் மற்றும் சேவை வர்த்தகத்தின் கேந்திர நிலையமாக இலங்கை அபிவிருத்தி செய்யப்படும்.

**புதிய பொருளாதார வளர்ச்சிப் படிவமொன்றுக்கான தெளிவான பொருளாதாரக் கொள்கை அடிப்படையிலான மறுசீரமைப்பொன்று மேற்கொள்ளப்படும்.** இதன் போது இலங்கையின் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடானது அரச முதலீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் மட்டும் தொடர்ந்தும் தங்கியிருக்கும் நிலை மாற்றியமைக்கப்படும். இலங்கையின் வயோதிபர் சனத்தொகை வேகமாக அதிகரித்துக் கொண்டிருக்கும் பின்னணியில் வருமானமீட்டுவோருக்கு சமாந்தரமாக தங்கி வாழ்வோர் எண்ணிக்கையும் அதிகரிக்கும் அதே நேரம் அரச கடன்கள் அதிகரித்து ஏற்றுமதி வீதம் வீழ்ச்சியடைந்திருப்பதும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் புதிய மறுசீரமைப்பொன்றுக்கான தேவைப்பாடு உணரப்படுகின்றது. குறித்த மறுசீரமைப்பு செயற்பாட்டுக்காக கொள்கை, சந்தை நிலைமைகள், அரசாங்கத்தின் பொறுப்பு மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் இலக்காகக் கொள்ளப்படும்.

**உறுதிமிகு மற்றும் நிலையான தன்னிறைவுப் பொருளாதார கட்டமைப்பானது முழுமையான மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு உட்படுத்தப்படும்.** மிகச்சிறப்பான முறையில் அரச வருமானம் மற்றும் செலவுகள் முகாமைத்துவம் செய்யப்பட்டு தூரதிருஷ்டியான நித மற்றும் அந்நிய செலாவணிக் கொள்கை மறுசீரமைக்கப்பட்டு சந்தை வாய்ப்பு, முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையான சாதக சந்தைவாய்ப்புக்கான சாதக நிலைமைக்கான மறுசீரமைப்பொன்றுக்கான அடிப்படையாக அமையும். அபிவிருத்திக்காக பல்வேறு வழிமுறைகள் கைக்கொள்ளப்பட்டு மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஊடாக சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தல் மற்றும் குறைந்த வருமானமுடைய மக்களை பயனுறு சேவை வழங்குனர்களாக உள்வாங்கப்படுவதை உறுதிப்படுத்தப்படும். நாம் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்பதுடன் சர்வதேச விலை ஏற்ற இறக்கங்களின் அதிர்ச்சியிலிருந்து உள்நாட்டு சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களை பாதுகாப்பதற்காக விலைச் சலுகையும் அளிக்கப்படும். மேலும் குறைந்த வருமானமுடையோருக்கு உறுதியான சமூக பாதுகாப்பு கட்டமைப்பொன்றின் ஊடாக பொருளாதார பாதுகாப்பு அளிக்கப்படும்.

**இதன் மூலம் இலங்கையருக்கு உயர்வான வாழ்க்கைத் தரம் மற்றும் உயர்மட்ட சமூக அந்தஸ்து கொண்ட சுபீட்சமான யுகமொன்றை எதிர்பார்க்கலாம்.** இலங்கையின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் துறையில் பல்வேறு புதிய வழிமுறைகளைக் கையாளல் மற்றும் தரத்தை உயர்த்துலின் ஊடாக பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது தொடர்பான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மேற்குறித்த கட்டமைப்பிலான சமூக மாற்றங்களின் ஊடாக ஏற்படும் மாற்றங்கள் இலங்கையை உயர்வருமானம் கொண்டதொரு நாடாக மாற்றியமைக்கத் தேவையான வலுவான நடுத்தர வர்க்கமொன்றை உருவாக்கும்.



அறிவு மற்றும் தொழில்நுட்பத்தின்

# ஊடாக கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையிலான இடைவெளியை பூர்த்திசெய்தல்



V2025 வளமான நாடு

2025 தூரநோக்கு



**இலங்கையை வளமான நாடாக மாற்றுவதே எமது நோக்கம்.** இந்துமா சமுத்திர பிராந்தியத்தில் இலங்கையை உயர்போட்டித்தன்மை மிக்க அறிவின் அடிப்படையில் சமூக பொருளாதார கேந்திர நிலையமாக நாம் மாற்றியமைப்போம். அனைத்து பிரஜைகளுக்கும் உயர் வருமானத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய சூழல் ஒன்றை நாம் உருவாக்குதுடன் தரமான வாழ்க்கைத் தரத்தை முன்னெடுப்பதற்கும் நாம் வழிவகை செய்வோம்.

அரசாங்க தகவல் திணைக்கள வெளியீடு

இல. 163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை
தொலைபேசி: +9411 251 5759 தொலைநகல்: +9411 257 3756 இணையதள: www.dgi.gov.lk